விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 032 வள்ளுவர் ஆண்டு 2057 தை 06 செவ்வாய்க்கிழமை (20.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

"கந்தரோடை விகாரை" என

## திசைகாட்டும் பெயர் பலகை அகற்றிய சம்பவம்

### தவிசாளர் பிரகாஸிடம் வாக்குமூலம்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் "கந்தரோடை விகாரை" என திசைகாட்டும்பெயர்ப்பலகை

15ஆம் பக்கம் பார்க்க

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம்

## 4 பௌத்த பிக்குகள் உள்ளிட்ட 9 பேரின் விளக்கமறியல் நீடிப்பு

(திருகோணமலை)
திருகோணமலை கடற்கரைப் பகுதியில் அனுமதி இன்றி புத்தர் சிலை ஒன்றை நிறுவ முயன்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பலாங்கொடை கஸ்ஸப்ப தேரர் உள்ளிட்ட 9 பேரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை மீண்டும் விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர்கள் அனைவரும் நேற்று (19) திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இவர்களில் நான்கு

15ஆம் பக்கம் பார்க்க

- செம்மணி மனிதப் புதைகுழி -

## தேங்கியுள்ள மழைநீரை அகற்ற நடவடிக்கை

- நீதிவான் உள்ளிட்ட குழுவினர் அகழ்வுப் பிரதேசத்துக்கு கண்காணிப்பு விஜயம்.
- மழைநீரை அகற்றிய பின் அகழ்வு தொடர்பில் தீர்மானம்.

*(02ஆம் பக்கம் பார்க்க)*



எதிர்வரும் 23ஆம் திகதிவரை

## வடக்கு - கிழக்கில் கடும் குளிர் நிலவும்

### அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)
வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளிலும் எதிர்வரும்

15ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் முதலிட முதலீட்டாளர்கள் ஆர்வம்

### வடக்கு ஆளுநர் வேதநாயகன்

(யாழ்ப்பாணம்)
முதலீட்டாளர்கள் வடக்கு மாகாணத்தில் முதலீடு செய்வதற்கு ஆர்வமாக உள்ள நிலையில், அதற்கான

02ஆம் பக்கம் பார்க்க

வவுனியா மயிலங்குளத்தில்

## நீராடச் சென்ற மாணவன் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(வவுனியா)
வவுனியா மயிலங்குளத்தில் நீராடச் சென்ற மாணவன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான்.

நேற்று முன்தினம்

15ஆம் பக்கம் பார்க்க



23ஆம் திகதி

## வைத்தியர்கள் தொழிற்சங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
எதிர்வரும் 23ஆம் திகதி முதல் விசேட வைத்திய

15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் எலிக்காய்ச்சலால் குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)
யாழில் எலிக்காய்ச்சல் காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுமரணமடைந்துள்ளார்.

இதில் அல்வாய் மேற்கைச் சேர்ந்த அன்னலிங்கம் அஜந்தன் (வயது 42) என்பவரே மரணமடைந்தவராவார்.

குறித்த நபருக்கு கடந்த 17ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டது.

15ஆம் பக்கம் பார்க்க




நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

அடிப்படை உட்கட்டுமானங்களை மேம்படுத்தி, முதலீட்டுக்கு ஏற்ற சூழலை உருவாக்க வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

நிதி அமைச்சின் கீழான தேசிய திட்டமிடல் திணைக்களம், தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஆகியவற்றின் பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழான உலக வங்கியின் திட்டங்களுக்கான பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினருக்கும், வடக்கு மாகாண ஆளுநர் தலைமையிலான அதிகாரிகளுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள் குழுவினர் வடக்கு மாகாணத்துக்கு உத்தியோகபூர்வமாக மேற்கொண்ட முதலாவது விஜயம் இதுவாகும்.

இக்கலந்துரையாடலில் உரையாற்றிய ஆளுநர் தெரிவித்ததாவது,

போர் முடிவடைந்து 16 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், வடக்கு மாகாணம் மீளக்கட்டியெழுப்பப்படுவதில் பல சவால்களை எதிர்கொண்டுள்ளது. பிரதான வீதிகள் புனரமைக்கப்பட்டிருந்தாலும், கிராமப்புற வீதிகள் மற்றும் தீவகப் பிரதேசங்களுக்கான போக்குவரத்து வசதிகள் மிகவும் பின்தங்கியுள்ளன. கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான நீண்ட பயண நேரம் சுற்றுலாவிகளுக்குச் சவாலாக உள்ளது.

எனினும், இந்தியாவுடனான நேரடி வான் மற்றும் கடல்வழித் தொடர்புகள் சுற்றுலாவிகளின் வருகையை அதிகரிக்கச் செய்துள்ளது. எனவே, எதிர்காலத்தில் அதிகரிக்கவுள்ள சுற்றுலாவிகளைக் கருத்தில் கொண்டும், எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள முதலீட்டாளர் மாநாட்டைக் கருத்தில் கொண்டும் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

எமது மாகாணத்தின் மூலப்பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டு, மீண்டும் முடிவுப் பொருட்களாக இங்கேயே விற்பனைக்கு வரும் நிலை மாற்றப்பட வேண்டும். இங்கேயே அவற்றைப் பெறுமதிசேர் பொருட்களாக மாற்றுவதற்குரிய பொறிமுறைகள் அவசியம்.

உலக வங்கியின் "புத்துயிர்" (REVIVE) திட்டத்தின் முதல் கட்டத்தில் யாழ். மாவட்டம் மட்டுமே உள்வாங்கப்பட்டுள்ளது. ஆனால், வடக்கின் ஏனைய நான்கு மாவட்டங்களும் அபிவிருத்தியில் பின்தங்கியுள்ளன. எனவே, ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கி எமது பொருளாதார மேம்பாட்டை உறுதிப்படுத்த நாம் விரும்புகின்றோம் என ஆளுநர் வலியுறுத்தினார். (ம-7)

## தேங்கியுள்ள...

செம்மணி மனிதப் புதைகுழி வழக்கு யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் நேற்றுக் காலை எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் குறித்த அகழ்வு பிரதேசத்தை யாழ் நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின்குமார், சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன், சட்டத்தரணிகளான வி.எஸ். நிரைஞ்சன், ரனித்தா ஞானராஜா, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர், பொலிஸார் அடங்கிய குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

ஏற்கனவே அகழ்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் வெள்ள நீர் புகுந்து நிரம்பிக் காணப்படுவதனால் அகழ்வுப் பணிகளை உடனடியாகத் தொடங்க முடியாது என்றும் இந்த வெள்ள நீர் வற்றும் மட்டும் பார்த்து அகழ்வுப் பணியை ஆரம்பிக்க வேண்டும் அல்லது அந்த நீரை அகற்ற வேண்டும் என்ற அடிப்படையில் எதிர்வரும் பெப்ரவரி 9ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை மூலம் சட்ட வைத்திய அதிகாரி ஊடாக நீதிமன்றத்தின் மேற்பார்வையின் கீழ் வெள்ள நீரை அகற்றுவதற்கான நடவடிக்கைக்குத் திகதி குறிக்கப்பட்டுள்ளது.

வெள்ளநீரை அகற்றிய பின்னர் அகழ்வுப் பணி எப்போது நடைபெறும் என்பது தொடர்பான திகதி நிர்ணயிக்கப்படும். இந்த வழக்கு பெப்ரவரி 9-ம் திகதி மீண்டும் அழைக்கப்படவுள்ளது.

மேலும் ஆண்டு நிறைவடைந்த நிலையில் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிய நிலையில், சட்ட வைத்திய அதிகாரியால் மீண்டும் பாதீடு தயாரிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அகழ்வு நடைபெறும் சித்துப்பாத்தி இந்து மயானப் பகுதியில் ஏற்கனவே இருந்த பாதைக்கு மேலாக அதனை நல்லூர் பிரதேச சபையினர் செப்பனிட்டு இருக்கிறார்கள். குறித்த விடயம் சட்டத்தரணிகளால் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மேலும் குறித்த பகுதியின் நிலப்பாங்கு தொடர்பான விடயத்தில் எந்த விதமான அபிவிருத்தியும் செய்வதற்கான அனுமதியும் கொடுக்கக் கூடாது எனவும் முழுமையான அகழ்வுப் பணிகள் பூர்த்தியாகும் வரை நிலத்தோற்றத்தில் மாற்றம் செய்யக்கூடாது என்றும் இதில் எதிர்வரும் காலத்தில் எதுவாக இருந்தாலும் நீதிமன்றத்தின் அனுமதி அவசியம் வலியுறுத்தப்பட்டது.

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து இதுவரையில் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின் போது 240 மனித என்புக்கூட்டு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 239 என்புக்கூட்டு எச்சங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


**காணி விற்பனைக்கு**

இருபாலை கற்பகப் பிள்ளையார் கோயிலுக்கு முன் உள்ள N.C ஒழுங்கையில் 03 பரப்பு காணியில் வீடு மற்றும் தென்னை மரங்களுடன் விற்பனைக்குண்டு.

077 436 6704
075 164 0104

(1962)

**மலிவு விலையில்**

பாடசாலை மாணவர்களுக்கான காலுறைகள்





மொத்த கொள்வனவுக்கு விசேட விலைக்கழிவு

076 315 6470

ஸ்ரீமுருகன் No,303, K.K.S Road, Jaffna.

(C-4848)

**ஓராண்டு நினைவஞ்சலி**



அன்னை மடியில் 14.04.1973

ஆண்டவன் அடியில் 20.01.2025

அமரர் **சண்முகம் சஷிஹரன்**

திதி : அபரபக்க ஷஷ்டி

அண்ணா! நீங்கள் பிரிந்து சென்று
ஓர் ஆண்டு கடந்தாலும் உம் நினைவுகள்
எம் மனதை விட்டு அகலவில்லையே!
மழைத்துளியாய் நீர் தந்த அன்பு
மறையவில்லை எங்கள் மனதில்
உங்கள் முகமும் புன்னகையும்,
இன்றும் எங்கள் மனதில்
நிழலாய் இலங்குகின்றதே!
மண்ணில் ஒன்றாய் வாழ்ந்த நிமிடங்கள்
மறைந்து போகுமோ?
எங்கள் நினைவுகளின் அலைகளில்
நீர் என்றும் உயிருடன் வாழ்வீர்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

(1956)

இடைக்குறிச்சி,
வரணி.

உங்கள் நினைவுகளுடன் வாழும் :
குடும்பத்தினர்

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் நிலாவரை வீதியில் 11 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- நிலாவரை வற்றாக் கிணற்றில் இருந்து 600m தூரம்
- பலாலி சர்வதேச விமான நிலையம் 4Km தூரம்
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்றுச் சூழல்
- வீடுகள் கட்டுவதற்கும் அனைத்துவிதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம்
- ஒரு பரப்பின் விலை புன்னாலைக்கட்டுவன் நிலாவரை வீதியை முகப்பாகக் கொண்ட காணித்துண்டுகள் 30 லட்சமும் 18 அடிப்பாதையை முகப்பாகக் கொண்ட காணித்துண்டுகள் 25 லட்சம் வரையும் உள்ளது.

பார்வையிடும் நேரம் : காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு : ஜெயம்

077 814 7389, 077 986 5457

(6603)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் மீதான ஒடுக்குமுறையை உங்களில் ஒருவராய் நின்று எதிர்க்கிறேன்

## சிங்கள எழுத்தாளர் திலீனா வீரசிங்க

(கிளிநொச்சி)

**தமிழர்கள்மீதான ஒடுக்குமுறைக்கு எதிராக எப்போதும் உங்கள் பக்கமே நான் இருக்கிறேன் என்று சிங்களக் கவிஞர் திலீனா வீரசிங்க தெரிவித்துள்ளார்.**



கடந்த 17ஆம் திகதி கிளிநொச்சியில் இடம்பெற்ற கவிஞர் தீபச்செல்வனின் நினைவில் நாடுள்ளவன் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உடலால் இன்று உங்களோடு இருக்கிறேன். ஆனால் நீண்ட காலமாகவே உங்களோடும், ஒடுக்கு முறையிலிருந்து விடுதலை பெறும் கனவோடும் நான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன். ஒவ்வொரு மனிதனும், சித்திரவதை இல்லாமல் சுதந்திரமாக மனிதத்தன்மையை அனுபவிக்க வேண்டும் என்ற ஒரே கனவை சுமந்து நிற்கும் தீபச்செல்வனின் மனிதநேய வெளிப்பாடே இன்று என்னை இங்கு அழைத்து வந்துள்ளது.

அந்தக் கனவின் வெளிப்பாடு தென்னகச் சகோதரத்துவம் மட்டுமல்ல, உலகமெங்கும் மனிதத்தன்மை, சுதந்திரம், நீதி, சமத்துவம் குறித்து மீண்டும் மீண்டும் சிந்திக்க வைக்கும் ஆழமான வாய்ப்பை உருவாக்கியுள்ளது.

இதன் மூலம், வடக்கின் சகோதரத்துவம் தசாப்தங்களாக தன் ஒடுக்கு முறையை எதிர்த்து சுதந்திரத்திற்காக நடத்திய போராட்டத்தை விட, எங்கள் அரசியல் பண்பாட்டின் மனசாட்சியை இன்னும் தீவிரமாகக் கேள்விக்குள்ளாகியுள்ளது.


மனிதத்தன்மை, சுதந்திரம், வன்முறையின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு வாழும் உரிமைக்காக உயிரையே பணயம் வைத்து கருத்து வெளிப்படுத்திய அவரின் கவிதைகள் எவ்வளவு ஆழமாக எங்களை பாதிக்கின்றன என அவர் தெரிவித்தார்.

தமிழ் தேசிய கலை இலக்கியப் பேரவை மற்றும் கிளிநொச்சி மாவட்ட விவாதிகள் கழக ஏற்பாட்டில் யாழ் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், றீச்சாவின் நிறுவுநர் கந்தையா பாஸ்கரன் மற்றும் சிங்கள எழுத்தாளர் திலீனா வீரசிங்க ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். நூலினை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வெளியிட றீச்சா நிறுவுநர் கந்தையா பாஸ்கரன் பெற்றுக்கொண்டார். (ஙி)


# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## ஸ்ரீமான் வேலுப்பிள்ளை பரராஜசிங்கம்

(பல்துறை வர்த்தகர், கமநிலக்கிழார்)



அன்பின் இருப்பிடமே ...
அமைதியின் பிறப்பிடமே...
ஆண்டுகள் இரண்டு சென்றாலும்...
ஆழமாக உள்ளீர் எம் மனதில்
இதயமதில் இருந்திடுவீர்
இந்நாளும்... எந்நாளும்
ஈரமான எம் விழிகளுடன்
உம் நினைவுகளை என்றும் - எம்
உள்ளங்களில் சுமப்போம்
அப்பா...
விலை உயர்ந்த வாழ்வியலில்
அழைக்க முடியாத விலைமதிப்பற்ற உறவு
எம் அப்பா...

அன்னாரின் 2 ஆம் ஆண்டு நினைவு நாளான இன்று 20.01.2026 செவ்வாய்க்கிழமை சந்நிதியான் ஆச்சிரமம் சைவ கலை பண்பாட்டுப் பேரவை - செல்வச்சந்நிதி, தொண்டமானாறில் அன்னதானம் இடம்பெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம்
02.03.1945

மறைவு
11.02.2024

"கலா கார்டின்"
335/7, மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(C-4846)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விளையாட்டுச் செய்திகள்

# சொந்த மண்ணில் வீழ்ந்த இந்தியா தொடரைக் கைப்பற்றிய நியூசிலாந்து




**இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இறுதி ஒரு நாள் போட்டியில் நியூசிலாந்து அணி 41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று இந்தியாவில் முதல் முறையாக ஒருநாள் தொடரை வென்றுள்ளது.**

இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி 3 ஒரு நாள் மற்றும் 5 ரி-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதுவரை இரண்டு ஒருநாள் போட்டிகள் நடந்து முடிந்த நிலையில் இரண்டு அணிகளும் தலா 1 புள்ளிகளைப் பெற்று சமனில் இருந்தன. இந் நிலையில் நேற்று முன்தினம் 3 ஆவது ஒருநாள் போட்டி நடைபெற்றது. இதில் நாயணச்சுழற்சியில் வென்ற இந்தியா பந்து வீச்சை முதலில் தேர்வு செய்தது. அதன்படி முதலில்துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 50 ஓவர்க ளின் முடிவில், 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 337 ஓட்டங்கள் குவித் தது. நியூசிலாந்து தரப்பில் டேரில் மிட்செல் 137 ஓட்டங்களும், கிளென் பிலிப்ஸ் 106 ஓட்டங்களும் எடுத்து முக்கிய பங்கு வகித்தனர்.

தொடர்ந்து 338 ஓட்டங்களை இலக்காக கொண்டு இந்தியா துடுப் பாட்டத்தை தொடர்ந்தது. அதன்படி இந்திய அணி யின் தொடக்க வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க விராட் கோலி மற்றும் நிதிஷ் ரெட்டி ஜோடி அணியை சரிவில் இருந்து மீட்டது.

இதில் விராட் கோலி 124 ஓட்டங்களிலும் நிதிஷ் ரெட்டி 53 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். அத்துடன ஹர்ஷித் ராணாவும் அரை சதம் கடந்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய குல்தீப் யாதவ் மற்றும் அர்தீப் சிங் ஓட்டங்கள் எதுவும் எடுக்கமால் ஆட்டமிழக்க இந்தியா 10 விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியை தழுவியது. இதன்மூலம் 41 ஓட்டங்கள் வித்தியாசத் தில் நியூசிலாந் து வெற்றி பெற்றது. நியூசிலாந்து தரப்பில் ஜகரி ஃபோக்ஸ், கிறிஸ் கிளார்க் தலா 3 விக்கெட்டுகளையும், ஜேடன் லெனாக்ஸ் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இதன் மூலம் நியூசிலாந்து அணி முதல் முறையாக இந்தியாவில் ஒருநாள் தொடரை கைப்பற்றியுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வராச்சந்தி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவம் கடந்த 17 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (படம் - சிவசாந்தன்)

# ஜனாதிபதி வழங்கிய 30 வாக்குறுதிகளில் 10 நிறைவேற்றம்

## கண்காணிப்பு தளத்தில் புதுப்பிக்கப்பட்ட அறிக்கை

(கொழும்பு) ........................................

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது வழங்கிய முக்கிய வாக்குறுதிகளில் 10 வாக்குறுதிகளை 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குள் நிறைவேற்றியுள்ளதாக "அநுர மீட்டர்" விஞ்ஞாபன கண்காணிப்பு தளத்தின் புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 30 பிரதான வாக்குறுதிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

அதன்படி, 10 வாக்குறுதிகள் (உதாரணமாக: PAYE வரி திருத்தம் மற்றும் அஸ்வெசும கொடுப்பனவு அதிகரிப்பு) நிறைவேற்றப்பட்டுள்ளன.

அத்துடன், 10 வாக்குறுதிகள் முன்னேற்ற நிலையிலும், 9 வாக்குறுதிகள் முன்னேற்றம் இல்லாதவையாகவும் காணப்படுகின்றன.

அதேநேரம், இவற்றில் ஒரு வாக்குறுதி தோல்வியடைந்துள்ளதாக அநுர மீட்டர் கண்காணிப்பு தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மதிப்பீட்டில் ஜனாதிபதியின் 2024 ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனம் மற்றும் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் அறிவிக்கப்பட்ட நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனினும், அண்மையில் ஏற்பட்ட "டித்வா" சூறாவளியின் தாக்கத்திற்கு முன்னரே இந்த மீளாய்வு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார சீர்திருத்தம், ஊழல் எதிர்ப்பு, காவல்துறை மற்றும் சட்ட ஒழுங்கு, ஆட்சி முறை மற்றும் சமூக பாதுகாப்பு போன்ற பொதுமக்கள் அதிக ஆர்வம் காட்டும் துறைகளே இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. (நி)

## தைப்பூச வழிபாடு

(யாழ்ப்பாணம்)

அருட்பெரும் ஜோதி இராமலிங்கப் பெருமானுடைய உலக அமைதிக்கான தைப்பூச திருநாள் நிகழ்வானது எதிர்வரும் பெப்ரவரி மாதம் 1 ஆம் திகதி அன்று சத்திய ஞானக்கொட்டம் மீசாலை, வடக்கு கொடிகாமம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள ஞானசபையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் இன்று காலை 4.30 மணி தொடக்கம் பிற்பகல் 12 மணிவரை திருவாசக முற்றோதலுடன் ஆரம்பமாகி நாளை முதல் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை காலை 4.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை அகவல் பாராயணம் நடைபெறும்.

அத்துடன் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 4 மணி தொடக்கம் 6 மணி வரை தைப்பூச வழிபாடும் காலை 6.30 மணி தொடக்கம் 7 மணி வரை அதிகாலை ஜோதி வழிபாடும் நடைபெறவுள்ளது. (3)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர் திருமதி. பத்மஜா பாஸ்கரக்குருக்கள் அவர்களின் தாயார்

அமரர். பத்மநாபசர்மா விமலா அம்மா



தோற்றம் 04.12.1948

மறைவு 18.01.2026

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


[1960]

பிரிவில் துயர் பகிரும் - ஆசிரியர் நலன்புரிக்கழகம் யா/ கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

## கண்ணீர் அஞ்சலி

நீர்வேலி பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியினதும் பொருளாளர் திரு.பொ.சரவணபவானந்தன் அவர்களின் அன்பு மைத்துனர்

அமரர். சின்னத்துரை சரவணபவான்



அவர்கள் 16.01.2026 அன்று இறைபதமடைந்துள்ளார் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் நீர்வேலி

(C-4847)


## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | வவுனியா ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 450 | 400 | 400 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 | -- |
| பச்சைமிளகாய் | 600 | 800 | 800 | 600 | 550 |
| தக்காளி | 600 | 500 | 700 | 600 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 250 | 150 | 80 |
| கோவா | 250 | 250 | 300 | 320 | 200 |
| கரட் | 400 | 450 | 600 | 600 | 400 |
| பூசணி | 100 | 140 | 150 | 150 | 80 |
| புடோல் | 250 | 350 | 200 | 400 | 300 |
| வாழைக்காய் | 150 | 140 | 150 | 250 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 350 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 200 | 200 | -- |
| பாகற்காய் | 600 | 600 | 400 | 1000 | 500 |
| வெண்டக்காய் | 400 | 300 | 250 | 400 | 250 |
| கருணைக் கிழங்கு | 300 | 260 | 250 | 300 | 200 |
| பயற்றங்காய் | 800 | 700 | 400 | 600 | 380 |
| லீக்ஸ் | 350 | 400 | 500 | 600 | 400 |
| பீற்றூட் | 450 | 500 | 1000 | 500 | 600 |
| கறிமிளகாய் | 800 | 900 | 800 | 800 | 850 |
| முருங்கைக்காய் | -- | -- | 1000 | -- | -- |
| போஞ்சி | 800 | 500 | 400 | 500 | 500 |
| கத்தரிதம்புள்ள | 250 | 300 | 400 | 350 | -- |
| கீரை - 1 பிடி | 100 | 80-140 | 150 | 150 | 160 |
| தேசிக்காய் | 300 | 200 | 200 | 200 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 100-150 | 120 |
| இராசவள்ளி | 600 | 500 | 500 | 500 | 470 |
| வெங்காயப்பூ | 600 | 400 | 500 | 700 | -- |
| முள்ளங்கி | 200 | 150 | 200 | 300 | 180 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 150 | 80 | 50 |
| வல்லாரை | 60 | 60 | 100 | 80 | 100 |
| சாப்பலா | 100 | -- | 100 | 150 | 90 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியலமைப்பை உருவாக்கி கூட்டாட்சியை வலியுறுத்தப் பார்க்கிறது இலங்கை அரசு

## ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

**(யாழ்ப்பாணம்)**

**தாயகம், தேசியம், தன்னாட்சி என்ற அடிப்படையில் ஒற்றையாட்சி அரசமைப்பு மாற்றப்பட்டு கூட்டாட்சி ஏற்பாடு தமிழர்களுக்கு உறுதி செய்யப்பட வேண்டும். அது மட்டுமின்றி, முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலைக்கு உள்ளான தமிழர்களுக்கு பன்னாட்டு சட்டநெறிகளின்படி ஈடுசெய் நீதியாக தமிழர்களின் இறைமை மீட்டளிக்கப்பட வேண்டும் என ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.**

ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கொளத்தூர் தா.செ.மணி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கையில்,

2009 ஆம் ஆண்டு நடைபெற்ற முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்குப் பின்னான இந்த 16 ஆண்டுகளில் இலங்கை தீவின் வடக்கு கிழக்கை தாயகமாக கொண்டிருக்கும் ஈழத் தமிழர்கள் கட்டமைப்பு வகைப்பட்ட இனவழிப்புக்கு ஆளாகிவருகின்றனர்.

நிலப்பறிப்பு, பௌத்த விகாரைகளை நிறுவி பண்பாட்டுத் திணிப்பு, சிங்களக் குடியேற்றங்கள், படைக்குவிப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் திட்டமிட்டு செயற்படுத்தப்படுகின்றன. அத்தகைய ஓர் கட்டமைப்பு வகைப்பட்ட இன வழிப்பின் பகுதியாகத்தான் புதிய அரசியல் அமைப்பு ஒன்றை கொண்டு வருவதன் மூலம் ஒற்றையாட்சியை மேலும் வலுப்படுத்தப் பார்க்கின்றது சிங்கள பௌத்தப் பேரினவாதம்.

இந்திய மத்திய அரசு எப்போதும் தமிழ்நாடு அரசின் நிலைப்பாட்டை துச்சமாக மதித்து சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு துணை செய்தே வந்துள்ளது. எனவே, தமிழ்நாட்டு சட்டப் பேரவை தீர்மானத்தை நினைவுபடுத்தி, இனவழிப்பையும் கருத்தில் கொண்டு ஈடுசெய் நீதியாக அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று மத்திய அரசுக்கு வலியுறுத்த வேண்டும் என்று சுட்டிக் காட்டுகிறோம்.

மேலும், இனவழிப்புக்கு நிதியும் அரசியல் தீர்வுக்கு பொதுவாக்கெடுப்பும் கோரும் தமிழ்நாடு சட்டப் பேரவை தீர்மானத்தை பன்னாட்டு அரங்கிற்கு கொண்டு செல்வதற்கு தனித்தும் இந்திய அரசின் வழியாகவும் தொடர்ந்து முயல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ்நாடு அரசு ஈழத் தமிழரின் அரசியல் தீர்வுக்காகவும் இனவழிப்புக்கு நீதி பெறவும் தொடர்ச்சியாக இந்தியமத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமை ப்பு வலியுறுத்தியுள்ளது. (க-8)

# குறை கேள் அரங்கு




## குன்றும் குழியுமான காரைநகர் வீதி
### கவனிப்பார்களா அதிகாரிகள்?

யாழ்ப்பாணத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்ப்பதில் காரைநகர் கசூரினா கடற்கரை முக்கிய பங்கு வகித்து வரு கிறது.

எத்தனை அழகான இடமாக இருந்தாலும் கடற்கரைக்கு செல்லும் வீதி குன்றும் குழியுமாக இருப்பதனால் பயணிகள் மீண்டும் அங்கு வரத் தயங்குகிறார்கள். இதனால் யாழின் சுற்றுலாத்துறை வருமானம் குறைவடைய வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கிறது.


கசூரினா கடற்கரை மூலம் அரசாங்கத்திற்கும் பிரதேச சபையிற்கும் வருமானம் கிடைக்கின்றது.

ஆயினும் வலந்தலைச் சந்தியிலிருந்து கசூரினா கடற்கரை வரையான வீதி மிகவும் மோசமான முறையில் சேதமடைந்து மக்கள் பயணிக்க முடியாத நிலையில் உள்ளது.

மழை காலங்களில் வீதியின் குழிகளில் தேங்கி நிற்கும் நீரின் ஆழம் தெரியாமல் மோட்டார் சைக்கிள் மற்றும் துவிச்சக்கரவண்டிகளில் பயணிப்பவர்கள் விபத்துக்குள்ளாகின்றனர்.

அன்றாடம் இவ் வீதியூடாகச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் வியாபாரிகள், அரச - தனியார் உத்தியோகத்தர்கள் பணியிடத்திற்கு செல்வதற்கு கால தாமதமடைவதாகவும் தமது வாகனங்களில் தொடர்ச்சியாக இயந்திர கோளாறுகள் ஏற்பட்டு மேலதிக செலவினங்கள் ஏற்படுவதாகவும் வருத்தம் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியின் புனரமைப்பு பணிகள் தொடர்பில் கலந்துரையாடல்கள் மட்டும் நீண்ட காலமாக இடம்பெற்று வருகின்றதே தவிர, அதனை நடைமுறைப்படுத்துவதாக தெரியவில்லை. எனவே சம்பந்தப்பட்ட அரச அமைப்புக்கள் இவ் வீதியைப் புனரமைப்பு செய்ய முன்வர வேண்டும் என் காரைநகர் மக்களும் கசூரினா கடற்கரைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



**அன்பு வாசகர்களே!**

**உங்கள் பிரதேசங்களில் தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினைகளை 'குறைகேள் அரங்கு' இற்கு புகைப் படத்துடன் எழுதி அனுப்புங்கள்.**

"குறைகேள் அரங்கு",
ஆசிரியர் வலம்புரி,
இல.191 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

076 636 3378
valampurii@yahoo.com

# யாழ்.வணிகர் கழகத்தால் வேலைவாய்ப்பு வங்கி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வணிகர் கழகம் கடந்த காலங்களைப் போல் மீண்டும் வேலை வாய்ப்பு வங்கியினை (பணிநிலை வங்கி) ஆரம்பித்துள்ளது.

இதில் வணிக நிறுவனங்களுக்கும் மற்றும் ஏனைய அனைத்து துறைகளுக்கும் ஊழியர்கள் தேவைப்படுவதால் இளையோர் மற்றும் அரச திணைக்களங்களில் ப்ணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் சுயவிபரங்களுடனான விண்ணப்பத்தை தங்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்தையும் இணைத்து இல. 165 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணத்தில் உள்ள வணிகர் கழக அலுவலகத்திற்கு கிடைக்கக் கூடியவாறு நேரடியாகவோ, தபால் மூலமாகவோ அல்லது yarlvanegarkalagam@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம் என கழகச் செயலாளர் அறிவித்துள்ளார். (8)

# சதுர்த்தி உற்சவம்



(யாழ்ப்பாணம்)

யாழ் வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திபிள்ளையார் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவம் எதிர் வரும் 22 ஆம் திகதி வியாழக் கிழமை நடைபெறவுள்ளது.

காலை 10.30 மணிக்கு அபிஷேகம், மூலஸ்தான பூஜை, வசந்தமண்டப பூஜை என்பன நடைபெற்று விநாயகப்பெருமான் திருவீதி வலம் வருவார் என ஆதீன கர்த்தாவும், பிரதமகுருவுமாகிய சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (8)

# நாவலர்சோலை முன்பள்ளிக்கு மாணவர்களை இணைத்தல்

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையினால் நடத்தப்படும் நாவலர் சோலை முன்பள்ளிக்கு எதிர்வரும் 21.01.2026 இல் இருந்து புதிதாக மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இங்கு வகுப்புக்கள் யாவும் இலவசமாகவே நடைபெறுகின்றன.எனவே மேற்படி செயற்பாட்டிற்கு பூரண ஒத்துழைப்புக்களை வழங்கி பயன் பெறுமாறு சைவ பரிபாலனசபை செயலாளர் அறிவித்துள்ளார். (8)

# தைப்பூச மஞ்சத்திருவிழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி ஆலய தைப்பூச மஞ்சத் திருவிழா எதிர் வரும் 01.02.2026 ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவுள்ளது.

இணுவில், மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்தில் இருந்து காலை 6 மணிக்கு பால் குட பவனி ஆரம்பமாகவுள்ளது.

இந் நிகழ்வில் ஆலயத்திற்கு சொந்தமான சங்குவேலி வயலில் இருந்து பாரம் பரிய முறைப்படி மாட்டு வண்டியில் புதிர் எடுத்து வந்து காலை 9 தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை பொங்கல் உற்சவம் இடம் பெறும்.

அன்றையதினம் மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று தொடர்ந்து முருகப் பெருமான் உலகப் பெரு மஞ்சத்தில் வீதிவலம் வரும் நிகழ்வும் தமிழர்களின் பாரம் பரிய கலைகலாசார நிகழ்வுகளும் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்துக்கள்



திருமதி. **வசந்தகுமாரி தவானந்தம்**

(Spe.Tr.in.Primary, SLTS - I)

**சேவை விபரம்**

- யா/கைதடி நுணாவில் அ.த்.க பாடசாலை
  27.11.1989 – 01.02.1993
- யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
  02.02.1993 – 31.12.1994
- யா/கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை
  01.01.1995 – 06.03.1996
- யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்
  07.03.1996 – 14.02.2010
- யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்
  15.02.2010 – 14.02.2019
- யா/கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை
  15.02.2019 – 20.01.2026

ஆசிரியப் பணியில் 37 வருடங்களில் எமது
பாடசாலையில் 7 வருடங்களுக்கு மேலாக
ஆசிரியராக சேவையாற்றி ஓய்வுபெறும்
திருமதி.வசந்தகுமாரி தவானந்தம் ஆசிரியைக்கு
இனிய மணிவிழா வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன்
அவரின் ஓய்வுக்காலத்தில் உடல் உள
ஆராக்கியத்துடன் மன மகிழ்ச்சியோடு என்றும்
இன்பமாய் வாழ வாழ்த்துவதுடன்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(1957)

வாழ்த்துவோர்:- **ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
**யா/கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை.**

# 1ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
குருவீதி,
காங்கேசன்துறை
14 – 11 – 1985

மறைவு
ஜேர்மனி
(Hannover garbsen)
30 – 01 – 2025

அமரர். **சித்துராங்கி அன்ரனி(சிந்து)**

(திதி: துதியை)

ஆண்டொன்று ஆனதுவோ
அவனி விட்டு நீங்கள் சென்று...!
ஆறாது தவிக்கின்றோம்
உங்கள் ஞாபகத்துடன்...!
மண்விட்டு மறைந்து
நீங்கள் விண்நோக்கி சென்றாலும்...!
எம் நினைவெனும் தீபத்தில்
நித்தமும் ஒளிர்வீர்கள்...!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உம் நினைவுகளுடன்,
சித்தப்பா,சித்தி,
சகோதரர்கள்
(ரமணன், ஜெனனி,கௌதம்,ஹம்சா, பவித்திரா)

குரு வீதி,
காங்கேசன்துறை.
077 042 4024

(1961)

A PROGRAM OF BOUNDLESS FUTURES FOUNDATION

# "TALK TO ME"

**"TALK TO ME" IS A SPECIALLY DESIGNED INTERACTIVE SPOKEN ENGLISH PROGRAM FOR PRIMARY SCHOOL CHILDREN WHO EXCEL ACADEMICALLY AND ASPIRE TO COMMUNICATE IN ENGLISH WITH CONFIDENCE.**

**"Talk to Me"** என்பது திறமையான ஆரம்பப்பள்ளி மாணவர்கள் ஆங்கிலத்தை நம்பிக்கையுடன் கற்றுக்கொண்டு பேசுவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு பேசும் ஆங்கிலப் பயிற்சி திட்டமாகும்.

| | | |
|---|---|---|
| **REGISTRATION AT BOUNDLESS FUTURES CENTER**<br>Starts 18th Jan 2026 Ends 31st Jan 2026<br>**Grade Level - Grade 1 / Grade 2** | **Program Start Date February 09, 2026**<br>**Registration Fee Rs.750 per Term**<br>( Classes will be conducted **free** of charge for **Gr 1-3**) | **Registration Weekdays**<br>3.00 PM - 6.00 PM<br>**Registration Weekends**<br>9.00 AM - 6.00 PM |

**TEACHING BASED ON SUPPLEMENTING SCHOOL CURRICULUM**

- Individual Attention
- Small batch size
- Personal Development
- Focus on Spoken Ability

- 45 minutes inside classroom activities
- 30 minutes Recreational Activities to enhance Creative Learning.
- 72 hours of learning per term

- Three classes (each 1 hr and 15 minutes) per week
- Admissions Limited
- One year program

*A Program of Boundless Futures Pvt Ltd*

# Spoken English Speaker Program

A Spoken English Workshop specially designed for students aged **11 to 16 years - 3 month short course**

Duration: 12 classes per month

Who can join?
Students between **11 – 16 years**
who want to improve their spoken English skills.
Limited seats available

Focus:
- Improve speaking confidence
- Better pronunciation
- Vocabulary building
- Everyday conversational English
- 72 hours of learning per term

மாணவர்களுக்கு சிறப்பாக வடிவமைக்கப்பட்ட வாய்மொழி ஆங்கில பயிற்சிப்பட்டறை

வயதெல்லை: 11 முதல் 16 | கால அளவு: மாதத்திற்கு 12 வகுப்புகள்

முக்கிய அம்சங்கள்:
- பேசும் நம்பிக்கையை மேம்படுத்துதல்
- சரியான சொல் உச்சரிப்பு பயன்பாட்டை விருத்தி செய்தல்
- அன்றாட ஆங்கில உரையாடல் திறனை வளர்த்தல்.

The course fee is Rs. 2,000 per month, with a one-time registration fee of Rs. 500.

**New Batch – Register Now!**

Bright Nest FROM LEARNING TO LEADING

*A Program of*
**BOUNDLESS FUTURES FOUNDATION**



*IN PARTNERSHIP WITH BOUNDLESS FUTURES USA*


No. 49/21, KANTHIYA UPATHIYAR ROAD, KANDARODAI, CHUNNAKAM
www.brightnest.org
0702327827
gm@brightnest.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# 'ஈரான் உச்ச தலைவரைத் தாக்குவது முழுமையான போர் தொடுத்ததற்கு சமம்'

## அமெரிக்காவுக்கு ஈரான் ஜனாதிபதி எச்சரிக்கை



(டெஹ்ரான்)
ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலிகமேனி மீதான எந்தவொரு தாக்குதல் நடவடிக்கையும் ஈரானுக்கு எதிரான முழுமையான போருக்குச் சமமானது என ஈரான் ஜனாதிபதி பெஷேஷ்கியன் தெரிவித்துள்ளார்.

ஈரானில் பொருளாதார நெருக்கடி மற்றும் விலைவாசி உயர்வால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் டெஹ்ரான் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் கடந்த சில வாரங்களாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

போராட்டத்தை கலைக்க முயன்ற பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே கடும் சண்டை ஏற்பட்டது.

நாடு தழுவிய போராட்டங்களில் இதுவரை சுமார் 500 பாதுகாப்புப் படையினர் உட்பட 5 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களை கைது செய்து ஈரான் அரசு மரண தண்டனை விதித்து வருகிறது. இதற்கு பல நாடுகளும் கடும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றன.

இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இது குறித்து அளித்த பேட்டியில், "ஈரானில் புதிய தலைமையைத் தேட வேண்டிய நேரம் இது. 800இற்கும் மேற்பட்டோரின் மரண தண்டனையை அவர்கள் ரத்து செய்தனர். அவர்கள் ரத்து செய்ததை நான் மிகவும் மதிக்கிறேன்.

இதன் காரணமாக ஈரான் விவகாரத்தில் அமெரிக்க தலையீட்டில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

போராட்டக்காரர்கள் தொடர்ந்து கொல்லப்பட்டாலோ அல்லது தூக்கிலிடப்பட்டாலோ அமெரிக்கா தலையிடவாய்ப்பு உள்ளது" என்று கூறினார்.

இதையடுத்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் "ஒரு குற்றவாளி" என்று ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி கூறியுள்ளார்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடன் தொடர்புடைய பயங்கரவாதிகள் மற்றும் கலகக்காரர்கள் தான் ஈரானில் பல ஆயிரம் இறப்புகளுக்கு காரணம் என்று அவர் குற்றம்சாட்டியுள்ளார்.


இந்தநிலையில் ஈரான் ஜனாதிபதி பெஷேஷ்கியன் வெளியிட்டுள்ள எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:

எந்தவொரு அநீதியான ஆக்கிரமிப்புக்கும் ஈரானின் பதிலடி கடுமையானதாகவும் வருந்தத்தக்க வகையிலும் இருக்கும்.

உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி மீதான எந்தவொரு தாக்குதலும் ஈரானுக்கு எதிரான முழுமையான போருக்குச் சமம்.

ஈரானின் பொருளாதார நெருக்கடிகளுக்கு அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் தான் காரணம்.

நீண்டகால விரோதமும் மனிதாபிமானமற்ற பொருளாதார தடைகளும் ஈரானிய மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களுக்கு ஒரு முக்கிய காரணம் என்று அவர் கூறியுள்ளார். (3)



# சிலியில் பாரிய தீ விபத்து 18 பேர் உயிரிழப்பு!



(சான்டியாகோ)
சிலியின் தெற்கில் உள்ள இரண்டு பிராந்தியங்களில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பேரழிவு நிலையை ஜனாதிபதி கேப்ரியல் போரிக் அறிவித்தார்.

குறைந்த பகுதிகளில் ஏற்பட்ட காட்டுத்தீயினால் குறைந்தது 20,000 பேரை வெளியேற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

மேலும், குறைந்தது 18 பேர் உயிரிழந்தனர்.

ஞாயிற்றுக்கிழமை காலை வரையான நிலவரப்படி,நாடு முழுவதும் பதிவான 24 தீ விபத்துகளை கட்டுப்படுத்த தீயணைப்பு வீரர்கள் போராடி வருவதாக சிலியின் CONAF வனவியல் நிறுவனத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவற்றில் மிகப்பெரியது Ñuble மற்றும் Bío Bío பகுதிகளில் ஏற்பட்ட தீ விபத்தானது - அங்கு அரசாங்கம் அவசரநிலையை அறிவித்தது.

இந்தப் பகுதிகள் தலைநகர் சாண்டியா கோவிலிருந்து சுமார் 500 கிலோமீற்றர் தெற்கே உள்ளன.

இரண்டு பிராந்தியங்களிலும் இதுவரை கிட்டத்தட்ட 8,500 ஹெக்டேயர் (21,000 ஏக்கர்) தீ விபத்துக்களை சந்தித்துள்ளன.

இதனால் பிராந்தியத்தில் உள்ள பல சமூகங்கள் ஆபத்தில் உள்ளன.

சிலியின் செனாப்ரெட் பேரிடர் நிறுவனம், குறித்த பகுதிகளிலிருந்து கிட்டத்தட்ட 20,000 பேர் வெளியேற்றப்பட்டதாகவும், குறைந்தது 250 வீடுகள் அழிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது. (3)




# கிரீன்...
## ட்ரம்பிற்...




ஆர்டிக் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள, உலகின் மிகப்பெரிய தீவு நாடான கிரீன்லாந்தை கைப்பற்ற அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முயற்சித்து வருகிறார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அத்தீவு நாட்டில் இதுவரை கண்டிராத மிகப்பெரிய ஒருங்கிணைந்த போராட்டத்தை அந்நாட்டு மக்கள் மேற்

கொண்டு... கட்சி... அனைத்... பொழிலை... பொருட்ப... வீதிகளில்... உடைகள... கொடிகள... ன்லாந்து... என்ற ப... பேரணிய... தலைந... பகுதியில்... பேரணி,...

# நேருக்கு நேர்... ஸ்பெயினை உ...

## 21 பேர் உயிரி...



(மாட்ரிட்)
தெற்கு ஸ்பெயினில் அதிவேக ரயில்கள் மோதி விபத்துக்குள்ளானதில் சுமார் 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடிய அச்சம் காணப்படுவதாக அந்த நாட்டு அதிகாரிகளை மேற்

கோள்... ஊடகங்க... ளன. இந்த... டோபா... லுள்ள... இடத்திற்... துள்ளது. அதிவே... தண்டவ... விலகி,...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# லாந்து விற்பனைக்கு அல்ல’
# ற்கு எதிராக மாபெரும் பேரணி




**(நூக்)** ---------------- **“கிரீன்லாந்து விற்பனைக்கல்ல” என்ற முழக்கத்துடன், அமெரிக்க ஜனாதிபதி டொனா ல்ட் ட்ரம்பின் கையகப்படுத்தும் முயற்சிக்கு எதிராக, அந்நாட்டின் ஆயிரக் கணக்கான மக்கள் திரண்டு பேரணி நடத்தினர்.**



ண்டுள்ளனர்.

ட்சி வேறுபாடின்றி னைத்து மக்களும் பனி றிவையும், குளிரையும் நட்படுத்தாது பனி நிரம்பிய ளில் தங்கள் பாரம்பரிய டகளை அணிந்து, தேசிய டிகளை ஏந்தி, “கிரீ ாந்து விற்பனைக்கல்ல” ற பதாகைகள் உடன் ணியாகச் சென்றனர்.

லைநகர் நூக்கின் மையப் யில் ஆரம்பமாகிய இப் ணி, அங்குள்ள அமெரிக்க தூதரகத்தை நோக்கி சென்றது. நூக்கின் மொத்த மக்கள் தொகை யில் நான்கில் ஒரு பங்கினர் இப்பேரணியில் பங்கேற்ற தாக செய்திகள் தெரிவிக்கின் றன.

இத்தீவின் வரலாற்றிலேயே மிகப்பெரிய போராட்டமாக இது கருதப்படுகிறது.

கிரீன்லாந்து பிரதமர் ஜென்ஸ் பிரடெரிக் நீல்சன் இப்பேரணியில் மக்களுடன் இணைந்து பங்கேற் றார்.

இப்போராட்டங்கள் கிரீன்லாந்தில் மட்டுமின்றி, டென்மார்க்கின் முக்கிய நகரங்களிலும் நடந்தது.

டென்மார்க் தலைநகரான கோபன்ஹேகனிலும் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு தங்கள் ஆதரவை தெரிவித்தனர்.

தலைநகரில் உள்ள “சிட்டி ஹால் ஸ்கொயர்” பகுதியில் திரண்ட மக்கள், அமெரிக்க தூதரகத்தை நோக்கி அணிவகுத்து சென்றனர்.

டென்மார்க்கின் முக்கிய நகரங்களான ஆர்கஸ், ஆல்போர்க், ஓடென்ஸ் ஆகிய இடங்களிலும் போராட்டங்கள் நடை பெற்றன.

கனடாவின் வடக்கு பகுதியில் உள்ள நுனாவுட் மாகாணத்தின் தலைநகரான இகாலுயிட் நகரிலும், கிரீன்லாந்துக்கு ஆதரவாக பேரணிகள் நடத் தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3)

## ர் மோதிய ரயில்கள் உலுக்கிய விபத்து!




ாள் காட்டி சர்வதேச கங்கள் தெரிவித்துள் ா.

இந்தச் சம்பவம் கோர் பா நகருக்கு அருகி ள அடமுஸ் என்ற த்திற்கு அருகே நிகழ்ந் ளது.


அதிவேக ரயில் ஒன்று ண்டவாளத்தை விட்டு கி, பக்கத்து தண்ட வாளத்தில் மோதியதாக ஸ்பெயினின் ரயில்வே திணைக்களம் தெரிவித் துள்ளது. அந்தச் சமயத் தில் ஹூயெல்வா நோக்கி எதிர்த்திசையில் பய ணித்த மற்றொரு ரயிலும் தண்டவாளத்தை விட்டு விலகி விபத்துக்குள்ளா னதாக கூறப்படுகின்றது.

குறித்த விபத்தில் சுமார் 73 பேர் காயமடைந்துள்ள நிலையில், அவர்களின் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ஸ்பெயினின் பிரதமர் பெட்ரோ சான் செஸ் நாடு பாரிய துக்கத்தை எதிர் நோக்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

விபத்து ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் 300இற்கும் அதிகமான பயணிகள் அந்த ரயில்களில் பயணித் துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ந்தும் ஸ்பெயினின் பாதுகாப்புப் படையினர் மற்றும் தீயணைப்பு வீரர்கள் இணைந்து மீட்புப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர். (3)



## கிரீன்லாந்து விவகாரம் குறித்து
### ட்ரம்பை சந்திக்கவுள்ள நேட்டோ தலைவர்

(பிரசெல்ஸ்)

ஆர்டிக் பகுதியில் உள்ள உலகின் மிகப் பெரிய தீவான கிரீன் லாந்து, டென்மார்க் நாட் டின் தன்னாட்சி பிராந் தியமாக உள்ளது. இதற் கிடையே தேசிய பாது காப்பு காரணங்களுக் காக கிரீன்லாந்து அமெ ரிக்காவுடன் இணைக்கப் படும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரி வித்தார்.

இது தொடர்பாக டென் மார்க்குடன் பேச்சு வார்த்தை நடத்தப்படும் என்றும் உடன்பாடு ஏற் படாவிட்டால் இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட லாம் என்றும் தெரிவித் தார்.

இதற்கிடையே கிரீன் லாந்தை அமெரிக்காவுடன் இணைப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் 8 நாடுகள் மீது கூடுதல் வரி விதித்து ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டார்.

இந்நிலையில், நேட்டோ அமைப்பின் பொது செயலாளர் மார்க் ரூட் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறிய தாவது:

கிரீன்லாந்து விவகாரம் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புடன் பேசினேன். அப்போது கிரீன் லாந்தில் செய்யப்பட் டுள்ள பாதுகாப்பு ஏற் பாடுகள் குறித்து கேட்ட றிந்தேன். தொடர்ந்து இந்த விவகாரத்தில்



மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து ஆலோசித்தோம்.

இந்த வாரம் டாவோசில் ஜனாதிபதி ட்ரம்பை சந்திக்க உள்ளேன் என தெரிவித்தார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் மீதான தாக்குதலுக்குக் கண்டனம் கல்வி மறுசீரமைப்புக்கு ஆதரவு

## தமிழ்ப் புத்திஜீவிகள், கல்வியியலாளர்கள் கூட்டாக அறிக்கை

**பிரதமர் கலாநிதி.ஹரிணி அமரசூரிய மீது நியாயமற்ற முறையில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களைக் கண்டித்தும் கல்வி மறுசீரமைப்புக்கு ஆதரவு தெரிவித்தும் தமிழ் புத்திஜீவிகள் மற்றும் கல்வியியலாளர்கள் உள்ளிட்ட 55 பேர் கூட்டாக ஒப்பமிட்டு விசேட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர். அதன் முழுவிபரம் வருமாறு...**



பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி. ஹரிணி அமரசூரிய அவர்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் அருவருப்பான. பெண் விரோதமான. அவதூறான தனிப்பட்ட தாக்குதல்கள் குறித்து எங்களது ஆழ்ந்த கவலையையும் கடும் கண்டனத்தையும் பதிவு செய்கிறோம்.

கலாநிதி. ஹரிணி அமரசூரிய அவர்கள் ஒரு அரசியல் தலைவி மட்டுமல்ல; அவர் ஒரு அறிஞர். புத்திஜீவி. சமூக நீதி. சமத்துவம் மற்றும் கல்விக்காக உழைப்பவர். கொள்கை விவாதங்களினை விடுத்து. தனிப்பட்ட அவதூறுகள் மூலம் அவரை இழிவுபடுத்த முயற்சிப்பது. அவரை மட்டுமல்ல. ஜனநாயக மதிப்புகள். பெண்களின் அரசியல் தலைமை மற்றும் பொது வாழ்வில் அறிவுசார் நேர்மை ஆகிய அனைத்தையும் அவமதிப்பதாகும்.

இத்தகைய தாக்குதல்கள் அநியாயமானவையும். ஒழுக்கமற்றவையும் மட்டுமல்ல; அவை ஜனநாயக உரையாடலையே இல்லாமல் ஆக்குகின்றன. தர்க்கபூர்வமான. ஆதாரமுள்ள விவாதங்களை மேற்கொள்ளாமல். சில அரசியல் சக்திகளும் அவர்களின் ஆதரவாளர்களும் திரிவுபடுத்தப்பட்ட மற்றும் தவறான தகவல்கள் மூலம் உணர்ச்சிகளைத் தூண்டும் யுக்திகள் மீது தொடர்ந்து நம்பிக்கை வைப்பது மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது.

இனவாதம் மற்றும் உணர்ச்சிபூர்வ அரசியலுக்காக இலங்கை கடந்த தசாப்தங்களில் மிகப் பெரிய விலையை செலுத்தியுள்ளது. நாட்டின் பொருளாதார வீழ்ச்சியும் சமூகச் சீர்கேடும் இத்தகைய தோல்வியடைந்த அரசியல் முறைகளின் நேரடி விளைவுகளாகும். மக்கள் இத்தகைய அரசியலை "அரகலயா" போராட்டம் வழியாக தெளிவாக நிராகரித்தனர். இன்று இலங்கை ஒரு வரலாற்றுத் திருப்புமுனையில் நிற்கிறது. ஊழல். இனவாதச் சுரண்டல் மற்றும் கொள்கை முடக்க நிலை ஆகியவற்றால் சபிக்கப்பட்டிருந்த பல தசாப்தங்களுக்குப் பிறகு. மக்கள் கட்டமைப்பு சார்ந்த மாற்றங்களுக்கான தெளிவான ஆணையை வழங்கியுள்ளனர்.

இவ் முக்கியமான தருணத்தில். இலங்கைக்கு முறையான மறுசீரமைப்புகள் அவசியம்; அதில் குறிப்பாக. கல்வி மறுசீரமைப்பு மிக முக்கியமானது. கல்வியே நீண்டகால தேசிய வளர்ச்சி. சமூக உயர்வு மற்றும் உலகளாவிய போட்டித்திறன் ஆகியவற்றின் அடித்தளம். ஆனால். நாட்டின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்த அதே சக்திகள். மீண்டும் ஒருமுறை மத. கலாசார மற்றும் உணர்ச்சி சார்ந்த விவகாரங்களை பயன்படுத்தி இந்த மறுசீரமைப்புகளைத் தடுக்க அல்லது திசைதிருப்ப முயற்சிப்பதை நாம் காண்கிறோம்.

வெறுப்பு. பயம் மற்றும் பிளவுகளால் எந்த நாட்டையும் மீண்டும் கட்டியெழுப்ப முடியாது என்பதைத் தீர்மானமாக வலியுறுத்துகிறோம். கல்வி மறுசீரமைப்பு ஒரு அரசியல் அச்சுறுத்தல் அல்ல; அது ஒரு தேசிய அவசியம். தனிப்பட்ட தாக்குதல்கள் மற்றும் உண்மையினை திரிவுபடுத்துவதன் மூலம் உருவாக்கப்படும் அவசியமற்ற சர்ச்சைகள் வழியாக மறுசீரமைப்பு களைத் தகர்க்க முயல்வது. நாட்டை பலவீனமாகவும் பிளவுபட்டதாகவும் வைத்திருந்து. அதன்மூலம் மீள அதிகாரத்திற்கு வர முயலும் சிலரின் அதிகார ஆசைகளுக்கே உதவும்.

இன்று கலாநிதி. ஹரிணி அமரசூரிய அவர்களை தாக்குவோர் கலாசாரத்தையோ. ஒழுக்கத்தையோ பாதுகாப்பவர்கள் அல்ல. அவர்கள் பாதுகாக்க முயல்வது தமக்கான சலுகைகளையும் தங்களது அரசியல் உயிர்வாழ்தலையும்தான். கடந்த 75 ஆண்டுகளாக இனவாதம், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் அறிவு விரோத அரசியல் மூலம் நாட்டை தோல்வியடையச் செய்தவர்கள். இன்று சிந்திக்கத் தெரிந்த. கல்வியறிவு பெற்ற. புதிய தலைமுறை உருவாகிவிடுமோ என்ற அச்சத்தில் இருக்கின்றனர்.

அதனால்தான் அவர்கள் இலக்காக்குவது:

- ஒரு பெண்ணை..
- ஒரு அறிஞரை.
- ஒரு மாற்றத்தை முன்னெடுக்கும் சீர்திருத்த வாதியை.

எனவே. நாம் தெளிவாக தெரிவிக்க விரும்புவது:

**01.** பிரதமர் மற்றும் கல்வி அமைச்சருக்கு எதிரான அனைத்து வகையான அவதூறுகள். பாலின அடிப்படையிலான தாக்குதல்கள் மற்றும் வெறுப்பு பிரச்சாரங்களை கடுமையாக கண்டிக்கிறோம்.

**02.** இலங்கையின் கல்வி மறுசீரமைப்புகளை வழிநடத்தும் கலாநிதி. ஹரிணி அமரசூரிய அவர்களின் தலைமையினை முழுமையாக ஆதரிக்கிறோம்.

**03.** மக்களின் ஆணையினையும். தேசியக் கொள்கையினையும். அடிப்படையாகக் கொண்டு. அரசு தயக்கமின்றி கல்வி மறுசீரமைப்புகளை உறுதியாக முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

**04.** தவறான தகவல்கள் மூலம் மக்களை அச்சமூட்டி மறுசீரமைப்புகளைத் தடுக்க முயலும் பிற்போக்குச் சக்திகளுக்கு எதிராக கல்வியாளர்கள். தொழில்முனைவோர். ஆசிரியர்கள். பெற்றோர். குடிமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து நிற்க வேண்டும் என அழைக்கிறோம்.

நாட்டை அழித்தவர்களால் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது.

கல்வி சீர்திருத்தம் குறித்து அஞ்சுபவர்களால் எதிர்காலத்தை உருவாக்க முடியாது.

சிலரின் அதிகார ஆசைகளுக்காக இலங்கையின் எதிர்காலம் பலியிடப்படக் கூடாது.

கல்வி அறிவு. மரியாதை மற்றும் தைரியத்துடன் இலங்கை முன்னேற வேண்டும்.

**கையொப்பமிடுவோர்:**

திரு.மார்க்கண்டு திருவதவூரன் (Attorney at law). கலாநிதி.செ. அறிவழகன் (University of Jaffna), கலாநிதி.S.றமேஸ் (University of Jaffna). கலாநிதி. மரியதாஸ் அல்பிரட் (Former Dean. University of Peradeniya). பேராசிரியர்.B. நிமலதாசன் (Senior Professor, University of Jaffna). திரு.S. ஸ்ரீவாகீசன் (Station Master, Sri Lankan Railways). திரு. A.T. அரவிந்தன் (Branch Manager, Commercial Bank). வைத்திய நிபுணர்.S.நித்தியரூபன் (Paediatrician. Teaching Hospital, Jaffna). வைத்திய நிபுணர்.S. செல்வகணேஸ் (Plastic and Reconstructive Surgeon, Teaching Hospital, Jaffna). வைத்திய நிபுணர்.S.மதிவாணன் (Consultant Surgeon, Teaching Hospital, Jaffna). பேராசிரியர். P.ஜங்கரன் (University of Jaffna). எந்திரி.M. சூரியசேகரம் (President, Education Development Consortium). வைத்திய நிபுணர். S.ரவிராஜ் (Senior Consultant Surgeon, Former Dean, Faculty of Medicine, University, Jaffna). திரு.சாமிநாதன் விமல் (University of Jaffna). கலாநிதி. A.அன்ரனிராஜன் (University of Jaffna). திரு.P.றெக்னோ (Attorney at Law). பேராசிரியர்.J.பிறின்ஸ் ஜெயதேவன் (University of Jaffna). பேராசிரியர்.S. முகுந்தன் (University of Jaffna). பேராசிரியர்.R.கபிலன்(University of Jaffna). கலாநிதி.S.ஜீவசுதன் (University of Jaffna). திருமதி. J.S. தவரூபன் (University of Jaffna). திரு.S.பாலபுத்திரன் (University of Jaffna). கலாநிதி. N.சிவபாலன் (Retired Senior lecturer, University of Jaffna). திருமதி.I.P.டனுசியன் (University of Jaffna). கலாநிதி.K. தபோதரன் (University of Jaffna). கலாநிதி. பகிரதி (University of Jaffna). திரு.பேரின்பநாயகம் றொனிபஸ் (Vice Secretary, Change Charitable Trust, Jaffna). கலாநிதி. S.மகேஸ்வரன் (University of Peradeniya). திரு.S. லலீசன் (Principal, Kopay Teachers' College). திரு.வி.அன்ரனி (Teacher, Kilinochchi). திரு.K.சாந்தகுமார் (Principal, Technical College, Vavuniya). திரு.S.திரிகரன் (Principal, J/Puttur Srisomaskanda College). கலாநிதி.T. வண்ணராஜன் (Advanced Technical Institute, Jaffna). திரு.X. டொன்பொஸ்கோ (Resource person, Piliyandala Educational Zone). திரு.K.ரவிக்குமார் (Regional Manager, Powerhands Pvt Ltd). திருமதி. சத்தியபிரியா ஜெயசீலன் (DO, Economist). திரு.A. கலைச் செல்வன் (Chief Accountant, Animal Productive & Health). திரு.C.வசந்தகுமார் (Retired Project Director). திரு.P.கிருபாகரன் (Department of Buildings (NP)). திரு.A. அன்ரனி பிலின்ரன். (David Peris Company. Jaffna). திரு. A. முரளி தரன் (Social Activist). திருமதி. சிந்துஜா ஸ்ரீதரன் (Independent Researcher). திரு.T.ஸ்ரீதரன் (Social Activist). திருமதி.ஞான சக்தி ஸ்ரீதரன் (Social Activist). திரு.P.தேவதர்சன் (Management Service Officer). திரு.S.மோகன் (Social Activist). திரு.K. ஜெயகுமரன் (Social Activist). கலாநிதி.N.நித்தியானந்தன் (Chairman, Ratnam Foundation), திரு.ஜோர்ஜ் அன்ரனி கிறிஸ்ரி (Social Activist). திரு.S.தங்கராசா (Social Activist). திரு.N.பவண் (Retd. Deputy Principal, Mahajana College). திரு.P. முத்துலிங்கம் (Executive Director, Institute of Social Development, Kandy), திரு.M.K. சிவராஜா (Social Activist). திரு.V. சிவலிங்கம் (Human Rights Activist). திரு.S.ஜெய கணேசன் (Samuthi Development Officer)

## 2000ரூபாய் அவதானம் மக்களே!




(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி அதன் 75ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் 2000 ரூபாய் நாணயத்தாளின் முக்கிய பாதுகாப்பு அம்சங்களை வெளியிட்டுள்ளது.

மத்திய வங்கியின் கூற்றுப்படி. இந்த 2000 ரூபாய் நாணயத்தாள் பொதுமக்கள் அதன் நம்பகத்தன்மையை எளிதாக சரிபார்க்க உதவும் வகையில் பல பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கியுள்ளதாக தெரிவித்துள்ளது.

இந்தத் தாளை வெளிச்சத்திற்கு மேலே உயர்த்திப் பிடித்தால், வாளினை கொண்ட சிங்கம் முழுமையாக தெளிவாக தெரியும்.

வெளிச்சத்திற்கு மேலே உயர்த்திப் பிடித்தால், நிறம் மாறும். பாதுகாப்பு நூல் நீல நிறத்தில் இருந்து பச்சை நிறத்திற்கு மாறி, கொழும்பில் உள்ள கடிகார கோபுரத்தினை காட்டுகின்றது.

மேலும் பார்வைக் குறைபாடுள்ளவர்களுக்கு உதவ வடிவமைக்கப்பட்ட ஆறு தொட்டுணரக்கூடிய பட்டைகள் உள்ளன. புற ஊதா ஒளியின் கீழ், ஆண்டு கருப்பொருளில் ஒளிரும் இரட்டை வண்ணங்கள் மற்றும் முன்வானலை தோன்றும், மதிப்பும் தெரியும். இதனால் உண்மையான ரூபாய் தாள்களை இயந்திரத்தினால் அடையாளம் காணமுடியும்.

போலி ரூபாய் தாள்களை கண்டுபிடிக்கவும் இந்த அம்சங்களைப் பயன்படுத்துமாறு மத்திய வங்கி பொதுமக்களை வலியுறுத்துகின்றது. (நி)

## பிரதமர் ஹரிணி சுவிஸ் விஜயம்

(கொழும்பு)

சுவிட்சர்லாந்தில் நடைபெறும் 56ஆவது உலக பொருளாதார மன்ற வருடாந்த கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக பிரதமர் நேற்றுக் காலை நாட்டிலிருந்து புறப்பட்டுள்ளார்.

2026 உலக பொருளாதார மன்ற வருடாந்த கூட்டம் சுவிட்சர்லாந்தின் டாவோஸ்-க்ளோஸ்டர்ஸில் நடைபெற உள்ளது.

"உரையாடலின் உணர்வு" என்ற கருப்பொருளின் கீழ் நடைபெறும் 2026 உலகப் பொருளாதார மன்றத்தில், அரச தலைவர்கள், முன்னணி பன்னாட்டு நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்பாளர்கள் உட்பட 3,000இற்கும் மேற்பட்ட உலகளாவிய தலைவர்கள் கலந்துகொள்வார்கள்.

இந்தப் பயணத்தின் போது. பிரதமருக்கும் சர்வதேசத் தலைவர்கள், உலகளாவிய நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பிற சிறப்பு விருந்தினர்களுக்கும் இடையே உயர்மட்ட இருதரப்பு கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு இல்லம் மெய்ப்பட (பகுதி 16)
## இலங்கையில் வீட்டு கட்டுமானத்தில் மரம் (Timber) ஒரு பொறியியல் பார்வை




**1. அறிமுகம்**

மரம் என்பது மனித நாகரிகத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்ட கட்டுமானப் பொருட்களில் ஒன்றாகும். இலங்கையிலும் இரும்புக் கம்பிகள், கான்கிரீட் மற்றும் நவீன கட்டுமான முறைகள் அறிமுகமாகுவதற்கு முன்பே, மரமும் மரம் சார்ந்த பொருட்களும் வீட்டு கட்டுமானத்தின் முதுகெலும்பாக இருந்தன. பழம்பெரும் கிராம வீடுகள் முதல் வளைவுகள், கோயில்கள் மற்றும் துணை கட்டமைப்புகள் வரை மரம் கட்டுமானத்திலும், கட்டடக் கலையிலும், முக்கிய இடம் பெற்றது.

இந்த கட்டுரை இலங்கையில் மரத்தின் வரலாற்றுப் பயன்பாடு, பிராந்திய வேறுபாடுகள், பாரம்பரிய பயன்பாடுகள், நவீன பொறியியல் பொருட்கள் அறிமுகமான பின்னர் ஏற்பட்ட மாற்றங்கள், வளக் குறைபாடு மற்றும் இறக்குமதி சார்ந்த சிக்கல்கள், பொறியியல் அடிப்படையிலான வடிவமைப்பு இல்லாமையால் ஏற்பட்ட குறைபாடுகள் மற்றும் வணிகத்துறையில் ஏற்பட்ட அசாதாரண செயற்பாடுகள் ஆகியவற்றை விளக்குகிறது. இதன் மூலம், நவீன சவால்கள் மற்றும் எதிர்கால மேம்பாடுகள் குறித்து விவாதிக்க அடித்தளம் அமைக்கப்படுகிறது.

**2. இலங்கையில் மரத்தின் வரலாற்றுப் பயன்பாடு**

இலங்கையில் மரத்தின் பயன்பாடு நூற்றாண்டுகளைத் தாண்டிய வரலாற்றைக் கொண்டது. குறைந்தது கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக, வீட்டு கட்டுமானத்தில் மரம் முக்கிய கட்டுமானப் பொருளாக பயன்படுத்தப்பட்டதற்கான சான்றுகள் காணப்படுகின்றன.

பாரம்பரிய வீடுகளில் பொதுவாக:

○கூரைகளைத் தாங்கும் மரத் தூண்கள்

○மரத் தாங்குகள், ராப்டர்கள், பர்லின்கள்

○உலோக ஆணிகள் இல்லாமல் செய்யப்பட்ட இணைப்புகள்

○மண் சுவர்கள், களிமண் கற்கள் மற்றும் ஓடு/தாழை கூரைகளுடன் இணைந்த மர அமைப்புகள்

இவை மரம் வெறும் அலங்காரப் பொருளல்ல. சுமையைத் தாங்கும் முக்கிய கட்டுமானப் பொருளாக இருந்ததை காட்டுகின்றன.

**3. பிராந்திய அடிப்படையிலான மர பயன்பாட்டு வேறுபாடுகள்**

இலங்கையின் காலநிலை மற்றும் தாவர வள வேறுபாடுகள் காரணமாக, மர பயன்பாடும் பிராந்தியங்களுக்கு ஏற்ப மாறுபட்டது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள்

○பனை (Palmyrah – Bor assus flabellifer) முக்கியமாக பயன்படுத்தப்பட்டது.

○கூரை அமைப்புகள், தூண்கள், வேலிகள் மற்றும் தற்காலிக அமைப்புகளில் பனை மரம் பயன்பட்டது.

மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்கள்

○தென்னை மரம் (Coconut timber) பரவலாக பயன்படுத்தப்பட்டது.

○பாலு (Palu – Manilkara hexandra) அதன் கடினத்தன்மை காரணமாக தூண்கள் மற்றும் கதவுச் சட்டகங்களுக்கு பயன்படுத்தப்பட்டது.

○வீரா, மில்லா, கும்புக் போன்ற மரங்களும் பயன்படுத்தப்பட்டன.

தென் மாகாணம்

○கும்புக், நடுன், ஹோரா, பலா (Jak) போன்ற கடின மரங்கள் அதிகம் பயன்படுத்தப்பட்டன.

○பலா மரம் கதவுகள், ஜன்னல்கள் மற்றும் உட்கட்டமைப்புகளுக்கு விரும்பப்பட்டது.

**4. பாரம்பரிய காலத்தில் மரத்தின் பயன்பாடுகள்**

முன்னைய காலங்களில் மரம் பெரும்பாலும்:

○கூரை அமைப்புகள்

○கதவுகள் மற்றும் ஜன்னல்கள்

○மரச்சாமான்கள்

○கலை மற்றும் அலங்காரப் பணிகள்

என்பவற்றிற்காக பயன்படுத்தப்பட்டது. அடித்தளங்களுக்கும் சுவர்களுக்கும் பெரும்பாலும் கல் மற்றும் மண் பயன்படுத்தப்பட்டது.

**5. நவீன பொறியியல் பொருட்கள் அறிமுகமான பின்னர் ஏற்பட்ட மாற்றங்கள்**

இரும்புக் கம்பி, சிமெந்து, கான்கிரீட் போன்ற நவீன கட்டுமானப் பொருட்கள் அறிமுகமான பிறகு, மரத்தின் பங்கு சில இடங்களில் மாற்றம் கண்டது.

○மரத் தூண்களுக்கு பதிலாக அதிக வலிமை கொண்ட கான்கிரீட் தூண்கள் பயன்படுத்தப்பட்டன.

○மரக் கூரைகளுக்கு பதிலாக எஃகு தாங்குகள் செயல்படுத்தப்பட்டன.

எனினும், மரம் முற்றிலும் அகற்றப்படவில்லை அது இன்னும்:

○கலப்பு கட்டுமானங்களில் துணை அமைப்பாக

○இரண்டாம் நிலை கட்டமைப்புகளில்

○தற்காலிகப் பணிகள் (formwork, falsework) மற்றும் scaffolding போன்ற இடங்களில்

என்பவற்றில் தொடர்ந்தும் முக்கிய பங்கு வகிக்கிறது.

**6. உள்ளூர் மர வளங்களின் குறைவு மற்றும் இறக்குமதி சார்பு**

அதிகமான கட்டுமானத் தேவை, வன வளக் கட்டுப்பாடுகள் காரணமாக, உள்ளூர் மர வளங்கள் குறைந்தன. இதனால் இலங்கை வெளிநாடுகளில் இருந்து மரங்களை இறக்குமதி செய்யத் தொடங்கியது.

○நியூசிலாந்து, ஐரோப்பா: பைன்

○மலேசியா, இந்தோனேசியா: டீக், மெராண்டி, பலாவ்

○இந்தியா: செயலாக்கப்பட்ட மரப் பொருட்கள்

**7. ஆரம்ப கால பொறியியல் குறைபாடுகள் மற்றும் தொழில்முறை மேலாண்மை தொடர்பான முக்கிய சவால்கள்**

கான்கிரீட் கட்டமைப்புகள் (BS 8110) மற்றும் எஃகு கட்டமைப்புகள் (BS 5950) தெளிவான வடிவமைப்பு குறியீடுகள், கணக்கீட்டு முறைகள் மற்றும் பாதுகாப்பு வரம்புகளுடன் வடிவமைக்கப்பட்டு வந்தன. அதற்கு மாறாக, மரம் தொடர்பான கட்டுமானங்களில் ஒரே மாதிரியான தேசிய அளவிலான பொறியியல் வழிகாட்டுதல்கள் மற்றும் வடிவமைப்பு தரநிலைகள் போதிய அளவில் உருவாக்கப்படவில்லை.

இதன் விளைவாக, பல சந்தர்ப்பங்களில் மரம் பொறியியல் கணக்கீடுகளை விட அனுபவம், பாரம்பரியம் அல்லது தனிப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் பயன்படுத்தப்பட்டது. இதனால்:

○தேவையை விட அதிகமான அளவில் மரம் பயன்படுத்தப்பட்டு, வள வீணாக்கம் ஏற்பட்டது.

○சில இடங்களில் சுமையைத் தாங்கும் திறன், நீடித்த தன்மை மற்றும் பாதுகாப்பு குறைபாடுகள் உருவாகின.

○ஒரே மாதிரியான செயல்திறன் இல்லாத கட்டுமானங்கள் காணப்பட்டன.

இந்த குறைபாடுகள் மரத்தின் இயல்பான திறனை பிரதிபலிப்பவை அல்ல. மாறாக, பொறியியல் அடிப்படையிலான திட்டமிடல், தரநிலை மற்றும் வழிகாட்டுதல்கள் இல்லாமையின் விளைவுகளாகவே கருதப்பட வேண்டும்.

மேலும், பிற வணிக துறைகளை போல், மர வணிகத்துறையும் சில இடங்களில் கடுமையான மற்றும் அதிரடி சக்திகளால் ஆட்கொள்ளப்பட்டு, தொழில்முறை அறிவால் அல்ல, அதிகாரப் பயன்படுத்துதலால் செயல்பட்டுள்ளது.

**8. நவீன சவால்கள்**

இன்றைய சூழலில், மரத்தை நிலைத்த மற்றும் பாதுகாப்பான கட்டுமானப் பொருளாக பயன்படுத்துவதில் பல்வேறு தொழில்நுட்ப, நிறுவன மற்றும் கொள்கை சார்ந்த சவால்கள் காணப்படுகின்றன.

(தொடரும்)

இலங்கை பொறியியலாளர் சங்கம்,
வடக்கின் அத்தியாயம்.

# இராசிபலன்

20.01.2026
தை 06 , செவ்வாய்க்கிழமை
துதியை பின்னிரவு 3.17 மணிவரை

திருவோணம் பிற்பகல் 2.00 மணிவரை
சுப நேரம் 11.05-12.35 மணிவரை
இராகுகாலம் 3.35-5.05 மணிவரை

சந்திராஷ்டமம்:
புநர் பூசம், பூசம்

வளவன்

**மேஷம்** — எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், வீட்டைப் பழுது பார்க்கும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்** — மனக்குழப்பம் அகன்று மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், செய் தொழில் மேன்மையுண்டு, வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** — தேவையற்ற பண விரயங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் நிதானம் தேவை, பிரயாண பயமுண்டு,வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்** — உங்களின் கருத்துக்களை பலரும் ஏற்று நடப்பர், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**சிம்மம்** — எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம்.

**கன்னி** — பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**துலாம்** — பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், நீண்ட நாட்களாக வாங்க நினைத்த பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்** — பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பாராட்டும் புகழும் கூடும் நாள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** — இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், மனதில் இருந்த பாரம் குறையும்.

**மகரம்** — பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்** — புண்ணிய காரியங்களில் நாட்டம் செல்லும்,வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, சுப விரயங்கள் கூடும்.

**மீனம்** — வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வழிபாடு நன்மை தரும், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், அதிஷ்ட வாய்ப்புக்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

பொய்யனின் நாக்கு நச்சுப்பாம்பின் விஷத்திலும் கொடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

959





அது ஒரு பன்றியின் முதுகில் போய்த் தைத்ததைப் பார்த்து விட்டு இளவரசன், "ஆஹா!" என்று உற்சாக கோஷம் செய்தான். அடுத்த கணத்தில் அந்தப் பன்றி உடம்பை ஒரு உலுக்கு உலுக்கியது. அம்பு தெறித்துக் கீழே விழுந்தது. பன்றி மேலே ஓடியது.

கந்தமாறன் அப்போது சிரித்த சிரிப்பில் ஏளனத்தின் தொனி தெரிந்தது. கரிகாலன் அவனைப் பார்த்து, "கந்தமாறா! எங்கே ஒரு பந்தயம்! நானும் வந்தியத்தேவனும் அந்தப் பன்றியைத் தொடர்ந்து போய் அதைக் கொன்று எடுத்துக் கொண்டு வருகிறோம். நீயும் பார்த்திபேந்திரனும் இன்னொரு பன்றியைத் துரத்திப் போய்க் கொன்று எடுத்து வாருங்கள்! இந்தப் பன்றிகள் இரண்டையும் கொல்லாமல் அரண்மனைக்குத் திரும்பக் கூடாது!" என்று சொல்லிக் கொண்டே குதிரையைத் தட்டி விட்டான். வந்தியத்தேவனும் அவனுடன் சென்றான்.

அவர்கள் தொடர்ந்து சென்ற காட்டுப்பன்றி எந்தத் திசையில் எந்த வழியாகப் போய்க் கொண்டிருக்கிறதென்பது கொஞ்ச நேரம் வரையில் தெரிந்து கொண்டிருந்தது. ஏனெனில் பன்றி சென்ற வழியிலிருந்த செடி கொடிகளும் புதர்களும் அந்தப் பாடுபட்டிருந்தன. பின்னர் ஒரு சிறிய கால்வாய் குறுக்கிட்டது. அது காட்டில் பெய்யும் மழைத் தண்ணீரை ஏரியில் கொண்டு வந்து சேர்க்கும் கால்வாய். அவ்விடத்துக்கு வந்த பிறகு பன்றி எந்தப் பக்கம் போயிற்று என்று கண்டுபிடிக்க முடியவில்லை. கால்வாயைக் கடந்து அப்பாலுள்ள காட்டுக்குச் சென்றதா? கால்வாய் ஓரமாக இந்தப் பக்கமாகவோ, அந்தப் பக்கமாகவோ சென்றதா என்பதை அறிய முடியவில்லை.

அச்சமயம் கால்வாயின் வழியாகத் தெரிந்த ஏரியின் விசாலமான நீர்ப்பரப்பில் தெரிந்த ஒரு காட்சி அவர்களுடைய கவனத்தைக் கவர்ந்தது. படகு ஒன்று வந்து கொண்டிருந்தது. அதிலிருந்தவர்கள் பெண்மணிகள் என்றும் அறியக் கூடியதாயிருந்தது. ஆனால் அவர்கள் யார் என்று தெரிந்து கொள்ள முடியவில்லை. வந்தியத்தேவனும் கரிகாலனும் அச்சமயம் இருந்த இடத்தை நோக்கியே படகு வருவதாக முதலில் காணப்பட்டது. பிறகு திசை சற்றுத் திரும்பி, ஏரிக் கரையோரமாக இருந்த இன்னொரு தீவை நோக்கிச் சென்று படகு மறைந்து விட்டது.

"வல்லவரையா! படகில் வந்தவர்கள் யாராயிருக்கும்? பெண்மணிகள் போலத் தோன்றினார்கள் அல்லவா?" என்றான் கரிகாலன். "பெண்கள் போலத்தான் தோன்றியது அதற்குமேல் எனக்கும் தெரியவில்லை" என்றான் வந்தியத்தேவன்.

"ஒருவேளை சம்புவரையர் வீட்டுப் பெண்களாயிருக்குமோ?" "இருந்தாலும் இருக்கலாம் ஆனால் அவர்கள் ஏன் இவ்வளவு தூரம் வரவேண்டும்?"


"ஆமாம் அவர்களாயிருக்க முடியாதுதான் காலையில் பழுவேட்டரையர் புறப்பட்டுப் போய்விட்டார் அல்லவா? நிச்சயந்தானே?" "நிச்சயந்தான், ஐயா! அரண்மனை வாசல் திறப்பதையும் அவர் யானை மீது வெளியே போவதையும் நானே பார்த்தேன்."

தொடரும்....



# சிறுவர் அரங்கம்

## எதிர்காலத் தண்டனை



அரசனின் படுக்கையறையைப் பெருக்கிக் கொண்டிருந்தான் வேலைக்காரன். பட்டு மெத்தை இனிய சுழல், அரசன் வர நேரமாகும் என்ற எண்ணம் ஆகியவை அவனைப் படுக்கத் தூண்டின. ஆர்வத்தை அடக்க முடியாத அவன் படுக்கையில் படுத்து நன்றாகத் தூங்கி விட்டான். அறைக்கு வந்த அரசன் தன் படுக்கையில் வேலைக்காரன் உறங்குவதைக் கண்டு கோபம் கொண்டான். "யாரங்கே" என்று வீரர்களைப் பார்த்துக் கத்தினான்.

வீரர்கள் ஓடி வந்தனர். அரசனின் கூச்சல் கேட்டு வேலைக்காரனும் எழுந்தான்.

"என் படுக்கையில் படுத்த இவனுக்கு என் கண் எதிரிலேயே நூறு சவுக்கடி கொடுங்கள்" என்று கட்டளை இட்டான் அரசன்.

தண்டனை நிறைவேற்றப் பட்டது. அவன் எல்லா அடிகளையும் பொறுமை யாகத் தாங்கிக் கொண்டான்.

வேலைக்காரனைப் பார்த்த அரசன் படுக்கையில் படுத்ததற்கு உனக்குச் சரியான தண்டனை கிடைத்தது. இனியேனும் ஒழுங்காக நடந்துகொள்" என்றான்.

இதுவரை பொறுமையாக இருந்த அவன் இப்பொழுது தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான்.

வியப்பை அடக்கமுடியாத அரசன் "இப்பொழுது எதற்காக இப்படி அழுகிறாய்?" என்று கேட்டான்.

அதற்கு அவன் "நான் ஒரே ஒருமுறை இந்தப் படுக்கையில் படுத்ததற்கே எனக்கு இந்தத் தண்டனை கிடைத்தது.

நீங்கள் நாள்தோறும் இதில் படுக்கின்றீர்களே உங்களுக்கு என்ன தண்டனை காத்திருக்கிறதோ என்று நினைத்தேன்.

உடனே அழுகை வந்து விட்டது. என்று பதில் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களிடம் நல்ல குணங்களையே காணும் பழக்கத்தின் மூலம் நற்குணங்கள் அதிகரிப்பது புரியும். – அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## ஈனப் பிறவிகளிடம் இருந்து நாட்டை மீட்பது கடினமானதே!

கல்வி மறுசீரமைப்புத் தொடர்பில் போர்க் கோலம் பூண்ட எதிர்க்கட்சிகளை நினைக்கும் போது எங்கள் நாடு உருப்படுவதற்கு இன்னும் குறைந்தது ஐம்பது ஆண்டுகள் தேவைப்படும் என எண்ணத் தோன்றுகிறது.

ஆம், ஆளுந்தரப்பைக் கடித்துக் குதறுவதற்கு சந்தர்ப்பம் தேடிக் கொண்டிருந்த எதிர்க்கட்சிகள் கல்வி மறுசீரமைப்பில் ஏற்பட்ட ஒரு சில வழுக்களைத் தூக்கி துலாம்பரப்படுத்தி, தங்களின் காழ்ப்புணர்வை கொட்டித் தீர்க்கின்றன.

அதிலும் கல்வி அமைச்சராக இருக்கக் கூடிய பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை அவர்கள் எப்படியெல்லாம் கீழ்த்தரமாக விமர்சிக்க முடியுமோ அந்தளவுக்குத் தங்களைத் தாழ்த்தி மிக மோசமான விமர்சனங்களை முன்வைக்கின்றனர்.

அதிலும் சில பௌத்த பிக்குகள் கூறிய வார்த்தைகளைக் கேட்கும்போது சீ... இந்த ஈனப் பிறவிகள் மதகுருமாராக இருந்தால், எங்கள் நாடு ஒருபோதும் உருப்படாது என்று அடித்துக் கூறும் அளவில் நிலைமை உள்ளது.

எங்கள் தமிழ் அரசியலில், சமகாலத்தில் நடந்தாகின்ற விரசமான விமர்சனங்களின் அடிப்படையில், எங்கள் இனத்தில்தான் இப்படியொரு நாசம் என்று நினைத்தபோது, கல்வி மறுசீரமைப்பை முன்வைத்து பிரதமர் ஹரிணி அமரசூரியவை எதிர்க்கட்சிகள் கடித்துக் குதறியமையானது, அட! ஒட்டு மொத்த இலங்கையும் அப்படித்தான் என்ற தீர்மானத்துக்கு வரமுடிந்தது.

ஆம், கற்றவர்கள் என்றும் அரசியல் தலைவர்கள் என்றும் பௌத்த துறவிகள் என்றும் நாம் மதிப்பளித்தவர்கள்; மதுபோதையில் சந்தியில் நின்று தகாத வார்த்தைகளைக் கொட்டித் தள்ளுகின்ற தரங்கெட்டவர்களை விட மோசமானவர்கள் என்ற உண்மை இப்போது வெளிப்பட்டுள்ளது.

ஆம், கடந்த காலங்களில் அச்சு மற்றும் மின்னியல் ஊடகங்கள் தகவல்களை கௌரவமாக வழங்கின.

ஆனால் இணையவழித் தொடர்பாடல்கள் காரணமாக எழுச்சி பெற்ற சமூகவலைத் தளங்கள், நாம் மதித்தவர்களின் தராதரத்தை அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்துக் காட்டி வருகின்றன.

உண்மை. கள்ளுத்தவறணையில் தள்ளாடியபடி சத்தம் வைக்கின்ற சாமானிய மனிதர்கள், இவர்களைவிட எத்துணை மேலானவர்கள் என்ற உண்மையும் இதனூடு தெரியவந்துள்ளது.

இங்குதான் எங்கள் நாடு இன்னமும் அடிப்படைப் பண்பாடுகளைப் பின்பற்றவில்லை என்ற நிதர்சனமும் உணரப்படுகிறது.

ஆம், நாடு பற்றி எந்தச் சிந்தனையும் இல்லாத – மக்களின் வாழ்க்கைத் தரம் பற்றி இம்மியும் கவலைப்படாத – ஏழை மக்கள் சாப்பிடுகிறார்களா? அவர்களின் சீவியம் எவ்வாறு நடந்தாகிறது என்று ஒருபோதும் நினைக்காத ஈனர்கள் நாட்டை ஆள்வது பற்றியே கனவு காண்கிறார்கள்.

இத்தகைய நிலைமை சிங்களத் தரப்புகளிடம் மட்டும் என்று எண்ணி விடாதீர்கள். மாறாக எங்கள் தமிழ்த் தரப்புகளின் நிலைப்பாடும் அதுவே.

இந்த நரகத்து ஜீவிகளிடம் இருந்து எங்கள் நாட்டை முன்னேற்றப் பாதையில் பயணிக்க வைப்பதென்பது மிகக் கடினமான காரியம்.

# யாழில் தமிழர்களுடன் பொங்கலுண்ட அநுர பௌத்தத்தைத் தொடர்ந்தும் நிந்திக்கின்றாராம்!

## சரத் வீரசேகர கடும் பாய்ச்சல்

(கொழும்பு)

ஜனாதிபதி யாழ்ப்பாணம் சென்று பொங்கல் உண்ணுகின்றார். ஆனால் சில் அனுஷ்டிக்க தெற்கில் இருந்து வடக்கிற்குச் செல்லும் பௌத்தர்களை அவமதித்து கருத்துக் கூறுகின்றார்.

தெற்கில் இருந்து செல்பவர்கள் இனவாத முரண்பாட்டை ஏற்படுத்தவே வடக்கிற்கு செல்கின்றனர் என்று கூறி எமது மதச் செயற்பாடுகளை நிந்திக்கின்றார் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பான வழக்கு நேற்று திங்கட்கிழமை திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது நீதிமன்றத்துக்குப் பிரசன்னமான சரத் வீரசேகர ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

திருகோணமலையில் புத்தர் சிலையை 2004 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் போரிட்டுத் தான் பாது காத்தோம். இன்றும் திருகோணமலை டச்பே கடற்கரைப் பகுதியில் அண்மையில் அமைக்கப்பட்ட புத்தர் சிலையை பாதுகாப்பதற்காக, "நவீன பிரபாகரன்களுக்கு" எதிராகப் போராட வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

அரசாங்கத்தில் தற்போது உள்ள பிரபாகரன்கள் மற்றும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தில் இருக்கும் பிரபாகரன்களிடம் இருந்து இந்த சிலையை பாதுகாக்கப் போராட்டம் நடத்த வேண்டியுள்ளது.

நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் ஏனைய சில அமைச்சர்களும் பௌத்த சமயத்தையும் பௌத்த சாசனத்தையும் தொடர்ந்து அவமதித்து வருகின்றனர்.

இதற்கு மேலாக தற்போது பௌத்த பிக்குகளைக் கைது செய்து சிறையில் வைத்துள்ளனர். இவ்வாறு இவர்கள் தொடர்ந்து பௌத்தத்திற்கு எதிராகச் செயற்படுவதை நாம் அனுமதிக்க மாட்டோம்.

பிரதமரும் அமைச்சர் லால் காந்தவும் தொடர்ந்து பிக்குமாரை அவமதிக்கும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இந்த அரசாங்கத்திற்கு வாக்களித்த பௌத்த சிங்கள மக்களுக்கு இதன் மூலம் துரோகம் இழைக்கப்படுகின்றது.

இது மிகவும் கவலைக்குரிய நிலைமையாகும். தேரவாத பௌத்த நாட்டில் இவ்வாறான ஒரு நிலை இருள் சூழ்ந்த கால கட்டமாகும்.

அதாவது புத்தர் சிலை ஒன்றை நிறுவுவதற்கு முயற்சித்த பிக்குகள் ஒன்பது பேர் கைது செய்யப்பட்டு வழக்கு நடந்து கொண்டிருக்கிறது.

மதஸ்தலத்திற்கான உறுதி இருக்கும் இந்த காணியில் புத்தர் சிலை அமைப்பது சட்டவிரோதமானது என்றால், கடற்கரையோரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் ஏனைய மதஸ்தலங்கள் மற்றும் கட்டிடங்களும் அகற்றப்பட வேண்டும்.

கரையோரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இந்துக் கோயிலை அகற்ற நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த போதும் அதை அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

ஆனால் புத்தர் சிலை அகற்றல் பௌத்த தர்மத்துக்கு எதிராக அரசாங்கம் திட்டமிட்டு செய்யும் செயற்பாடாகவே நான் பார்க்கிறேன் எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

### கச்சதீவு திருவிழாவை முன்னிட்டு

## நெடுந்தீவு படகுகளுக்கு விசேட தரப் பரிசோதனை

கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தல திருவிழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நிலையில், கச்சதீவிற்கு பக்தர்களை ஏற்றிச்செல்லும் நெடுந்தீவுப் படகுகளுக்கான விசேட தரப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதன் பிரகாரம் கப்பல் கட்டும் வாணிபத் துறையினரால் பெப்ரவரி முதல் வாரத்தில் குறித்த தரப்பரிசோதனைகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே தரப்பரிசோதனைக்காக படகு விபரங்களை நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யுமாறும் கடந்த வருடம் படகு சார்ந்து சுட்டிக் காட்டப்பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தியாக்கி தயார் நிலையில் இருக்குமாறும் நெடுந்தீவு பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (ம-7)

## சைவ பரிபாலன சபையால் தேர்வுத் திகதி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த டிசம்பர் மாதம் நடைபெறவிருந்த நிலையில், சீரற்ற காலநிலை காரணமாகப் பிற்போடப்பட்ட யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் அகில இலங்கை ரீதியான சைவநெறி மற்றும் தமிழ்மொழியும் நுண்ணறிவுத் தேர்வுகள் எதிர்வரும் சனிக்கிழமை (24) காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

எனவே விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் தங்களது பாடசாலைகள் ஊடாகப் பங்குபெறுமாறும் தேர்வுகள் தொடர்பான மேலதிக விபரங்கள் மற்றும் சந்தேகங்களை அந்தந்தப் பாடசாலை அதிபர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும் எனவும் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வடக்கில் முகாமிட்டுள்ள சுவாசிக்க ஒவ்வாத வளி

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் வளியின் தரம் குறைவடைந்துள்ளதால் பொதுமக்களை விழிப்புடன் செயற்படுமாறு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி அஜித் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நேற்று திங்கட்கிழமை அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

திங்கட்கிழமை (19) முதல் வடக்கு, வடமத்திய, வடமேற்கு, மேற்கு மற்றும் தெற்கு மாகாணங்களிலும், இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களிலும் வளியின் தரச் சுட்டெண் 150 முதல் 200 வரை குறைந்துள்ளது.

வளியின் தரத்தில் ஏற்படும் இந்த வீழ்ச்சியால் சுவாசக் கோளாறுகள் அல்லது ஒவ்வாமை உள்ளிட்ட எதிர்விளைவுகளைச் சந்தித்தால் பொதுமக்கள் உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும்.

பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் போன்ற பொருட்களை எரிப்பதை பொதுமக்கள் தவிர்க்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (ம-7)

## தங்கத்தின் விலை மீண்டும் ஏறுமுகத்தில்

(கொழும்பு)

கடந்த ஒரு வாரமாக மாற்றமின்றி ஸ்திரமாக காணப்பட்ட தங்க விலையில், நேற்று (19) திங்கட்கிழமை திடீர் உயர்வு ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை நகையக வியாபாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

அந்தவகையில், தற்போதைய தங்க விலை நிலைவரப்படி,

24 கரட் தங்கம் பவுண் ஒன்று 368,000 ரூபாயாக விற்பனை செய்யப்படுகிறது. 22 கரட் தங்கம் பவுண் ஒன்று 340,400 ரூபாயாகவும், விற்பனை செய்யப்படுகிறது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ-இன் வரலாறு 01

என்.சொக்கன்

### 01. அடி

அதிகாலை மூன்றரை மணி "பேய்கள்கூட உறங்கும் நேரம்" என்று நம் ஊரில் சொல்வார்கள். அந்த நேரத்தில்தான் ஒரு விநோத மான விடயத்தைக் கண்டுகொண் டது அமெரிக்கக் கடற்படை.

நம்முடைய எல்லைக்குள், நீர் மூழ்கிக் கப்பல் ஒன்று உலாவிக் கொண்டிருக்கிறது என்று பேர்ள் துறைமுகத்தின் (Pearl Harbour) ரோந்துப்படை செய்தி அனுப்பியது. உடனடியாக, பெரிய அதிகாரிகள் தூக்கம் கலைந்து விழித்துக் கொண் டார்கள்.

இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த நேரம் அது. அமெரிக்கா இந்தப் போரில் நேரடி யாக ஈடுபடாவிட்டாலும், எந்த நேரத் தில் யார் யாரைத் தாக்குவார்கள் என்பது நிச்சயமாகத் தெரியாததால், எப்போதும் விழிப்போடு இருக்க வேண்டியிருந்தது.

ஆகவே, திடுதிப்பென்று இப்படி ஒரு நீர்மூழ்கிக் கப்பல் தென்பட்டதும் அவர்கள் உஷாராகிவிட்டார்கள். எந்த நாட்டுக் கப்பல், அதில் என்னெ ன்ன ஆயுதங்கள் மறைந்திருக்கின் றன, ஒரு கப்பல்தானா? அல்லது இன்னும் நிறைய கோஷ்டி சேர்த்துக் கொண்டு வந்திருக்கிறார்களா?


இன்னும் இருட்டு கலையாத அதிகாலை நேரத்தில், அவர்கள் இரகசியமாகப் படை திரட்டினார்கள். எப்படியாவது அந்தக் கப்பலைக் கண்டுபிடித்தாகவேண்டும். அப் போதுதான், இந்த மர்மத்தின் முடிச்சுகளை அவிழ்க்கமுடியும்.

எல்லோரும் பதற்றத்தின் உச்சி யில் இருந்தார்கள். கடலினுள், தரையில், வானத்தில் என்று எல்லா திசைகளிலிருந்தும் எதிரி நம்மைச் சூழ்ந்துவிட்டான் என்று புரிவதற்கு அவர்களுக்கு நான்கு மணி நேர மானது.

அந்தக் குழப்பத்தைப் பயன்படுத் திக்கொண்டு எதிரிப்படை, தனது திடீர்த் தாக்குதலைத் தொடங்கியது. எங்கிருந்து வந்தார்கள் என்றே தெரியாதபடி ஏகப்பட்ட போர் விமா னங்கள் பேர்ள் துறைமுகத்தைச் சுற்றி வளைத்துக்கொண்டு தாக்கத் தொடங்கின.

அமெரிக்கர்கள் கொஞ்சமும் எதிர்பார்த்திருக்காத தாக்குதல் அது. அந் நாட்டுக் கடற்படையின் மொத்த வலிமையும், பேர்ள் துறைமுகத் தில்தான் மையம் கொண்டிருந்தது. ஆனால், அங்கே இப்படி ஒரு தாக்குதல் நடக்கும் என்று அவர்கள் நினைத்திருக்கவில்லை.

இதைவிடப் பெரிய ஆச்சரியம், அவர்களைத் தாக்கிய அந்த "எதிரி", ஜப்பான் உலக வரை படத்தைப் பார்த்தால், அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் தூரம் அதிகமிருப்பதுபோல் தெரியும். ஆனால், பூமி உருண்டையில் அவை இரண்டும் அருகருகே உள்ள நாடுகள்தான். ஜப்பானில் இரகசியமா கக் கள்ளத்தோணி ஏறினால், பசுபிக் பெருங்கடலில் யாருடைய தடையும்



இல்லாமல் நேராக அமெரிக்க எல்லையைத் தொட்டுவிடலாம். ஜப்பான் அதைதான் செய்தது.

ஆறு விமானம்தாங்கிக் கப்பல்கள், அவற்றில் நூற்றுக்கணக்கான விமா னங்கள், போர்க்கப்பல்கள், நீர் மூழ் கிகள் என்று கோஷ்டி சேர்த்துக் கொண்டு கிளம்பியிருந்தார்கள். மூன்றாம் மனிதருக்குத் தெரியாதபடி, பேர்ள் துறைமுகத்துக்குச் சற்றுத் தொலைவில் மையம் கொண்டார் கள், ஒரு ஞாயிற்றுக்கிழமை அதி காலையில் தாக்குதலைத் தொடங்கி விட்டார்கள்.

பேர்ள் துறைமுகத் தாக்குதலுக் கான அடிப்படைக் காரணம், சிறிய தேசமான ஜப்பானுக்கு எப்படி அமெரிக்காவையே தாக்கும் அள வுக்கு தைரியம் வந்தது. இந்தத் தாக் குதலின் பின்விளைவுகள் எல்லாம் இந்தப் புத்தகத்தின் நோக்கத்துக்கு அப்பாற்பட்ட சமாசாரங்கள். இப்போ தைக்கு முக்கியமாக நாம் கவனிக் கவேண்டிய விடயம், சற்றும் எதிர்பாராதவிதமாக ஜப்பான் அமெ ரிக்காவை அடித்துவிட்டது.

அடி என்றால், சாதாரண அடி இல்லை. மரண அடி.

இப்படி ஒரு தாக்குதலுக்குக் கொஞ் சமும் தயாராக இல்லாமல், ஹவா யில் ஹாயாக ஓய்வு எடுத்துக்கொண் டிருந்த அமெரிக்க இராணுவத்தினர், பொதுமக்கள் மீது ஜப்பானிய விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்கத் தொடங்கியிருந்தன. இன்னொருபக்கம், அமெரிக்கப் போர்க்கப்பல்கள், விமானங்களை அடித்து வீழ்த்தினார்கள்.

அமெரிக்கா சுதாரித்துக்கொண்டு திருப்பித் தாக்குவதற்குள், அவர்க ளுக்கு ஏகப்பட்ட சேதத்தை உரு வாக்கிவிட்டது ஜப்பானியப் படை. அந்த டிசம்பர் 7, 1941 அமெரிக்க சரித்திரத்தில் மறக்கமுடியாத அவமா னமாகிவிட்டது.

மிஞ்சிப்போனால் பத்து மணி நேரம், அமெரிக்கர்கள் மிரண்டு விட்டார்கள். கொஞ்சம் வேகமாக உலக உருண்டையைத் திருப்பி னால் கண்ணில் படாமல் மறைந்து விடக்கூடிய மூட்டைப்பூச்சி தேசம், அமெரிக்காமீது இப்படி ஒரு தாக்கு தலை வெற்றிகரமாக நடத்திமுடித்து விட்டது என்பதை யாராலும் நம்பக் கூட முடியவில்லை.

அதன்பிறகு அமெரிக்கா உலகப் போரில் குதித்தது. ஜப்பான்மீது அணுகுண்டு வீசி நாசப்படுத்தியது எல்லாம் சரிதான். ஆனால், அந்த முதல் தாக்குதலை அவர்கள் எதிர் பார்க்காமல் அலட்சியமாக இருந்தது எப்படி?

அன்றைய சூழ்நிலையில், அமெ ரிக்காவின் முக்கியமான கவலை அதுதான். "நாங்கள் பெரிய தேசமாகும்" என்கிற கெத்து உயி ரோடு இருக்கும்வரைதான் அவர் களுடைய ஆதிக்கம் நீடிக்கும். ஜப்பான்மாதிரி யார் வேண்டுமா னாலும் அமெரிக்காவைத் தாக்கி காயப்படுத்திவிடலாம் என்று தெரிந்து விட்டால், அதன்பிறகு அமெரிக்கா வுக்கு அமிஞ்சிக் கரை மரியாதை தான். எங்கே தப்பு நடந்தது, ஏன் இந்த விஷயத்தை முன்கூட்டியே தெரிந்துகொள்ளாமல் கோட்டை விட் டோம் என்று தீவிரமாக ஆராயத் தொடங்கியது அமெரிக்கா. இந்த அலசலின்போது கிடைத்த சில தகவல்களைத் தொகுத்துப் பார்க்கும் போது, அவை ஜப்பானியத் தாக்கு தலுக்கு இணையான அதிர்ச்சியை உருவாக்கின.

பேர்ள் துறைமுகத் தாக்குதலுக்கு முன்பிருந்தே, ஜப்பானிய அதிகா ரிகள் அமெரிக்க அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்திக்கொண் டிருந்தார்கள். ஆனால் 1941 நவம்பர் மாதம் தொடங்கி, ஜப்பான் தரப்பில் ஓர் அவசரம் தெரிந்திருக்கிறது.

அதாவது, ஒருபக்கம் அமெரிக் காவுடன் நட்பாகப் பேசியபடி, இன் னொருபக்கம் ஜப்பான் போர் ஏற் பாடுகளில் இறங்கியிருக்கிறது. இதை வெளிப்படையாகச் சொல்லா மல், அவர்கள் சில இரகசிய நடவடிக் கைகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

"நவம்பர் 29 ஆம் திகதிக்குள், அமெரிக்கா- ஜப்பான் பேச்சுவார்த் தைகளில் சுமூக நிலை எட்டப்பட வேண்டும்" என்று ஜப்பானிய அமைச் சர் ஒருவர் பேசியிருந்தார். "அதன் பிறகு, நிலைமை கைமீறிவிடும்" என்று அவர் எச்சரித்ததை அமெரிக்கா சரியாகப் புரிந்து கொள்ள வில்லை. இதனால், டிசம்பர் மாதம் பிறந்ததும், அமெரிக்காவின் பல நகரங்களில் அமைந்திருந்த ஜப்பா னியத் தூதரகங்களுக்கு ஓர் உத்த ரவு சென்றது.

மிக முக்கியமான ஆவணங் களை மட்டும் வைத்துக் கொண்டு, மற்ற எல்லாவற்றையும் உடன டியாக அழித்துவிடுங்கள். "இனி மேல் போரைத் தவிர்க்க முடியாது" என்று ஜப்பானிய அதிகாரிகள் அடிக் கடி சொல்லிக் கொண் டிருந்தார்கள்.

அவர்களுடைய பேச்சுகளில், சில சந்தேக வார்த்தைகள் மீண்டும் மீண்டும் இடம்பெற்றன. பல ஜப்பா னிய நீர்மூழ்கிக் கப்பல்கள், திடீ ரென்று அமெரிக்க ரேடார் பார் வையிலிருந்து மறைந்துபோயின. அவற்றைப் பயன்படுத்தி, ஒரு இரகசி யத் தாக்குதலுக்கு ஜப்பானியர்கள் ரிகர்ஸல் பார்த்துக்கொண்டிருப்பதாக உறுதி செய்யப்படாத தகவல்கள் கிடைத்திருந்தன. (தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீராடச்...

மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் வவுனியா கோவில்புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த சிவலிங்கம் டனுசியன் (வயது -18) என்ற உயர்தர மாணவனே உயிரிழந்தவராவான்.

4 மாணவர்கள் மயிலங்குளத்தில் நேற்று முன்தினம் மாலை குளிக்கச் சென்றுள்ளனர். இதன்போது குறித்த மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான்.

இது தொடர்பாக மாமடுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,250)

## வடக்கு - கிழக்...

23ஆம் திகதி வரை மாலை 6.00 முதல் காலை 6.00 மணி வரை கடுங் குளிரான வானிலை நிலவும் வாய்ப்புள்ளது என யாழ். பல்கலைக் கழகத்தின் புவியியற்றுறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள பதிவில் மேலும் குறிப்பிடுகையில்,

குறித்த காலப்பகுதியில் உணரக் கூடிய வெப்பநிலையின் அளவு 16 பாகை செல்சியஸ் வரை நிலவுவதற்குச் சாத்தியமுள்ளது. இது முதியோர், குழந்தைகள், நோயாளர்கள் மற்றும் குளிர் உணர்திறன் உள்ளவர்களுக்கு அசௌகரியத்தையும் சிலருக்குப் பாதிப்புக்களையும் ஏற்படுத்தக் கூடும். இதற்கான காரணம் பகலில், தரை மேற்பரப்புகள் சூரிய ஒளியை உறிஞ்சி சூரியன் மறைந்த பின்னர் வளிமண்டலத்திற்கு நெட்டலைக்கதிர் வீச்சு வடிவில் மீண்டும் வெளியிடப்படுகிறது. இந்த நெட்டலைக்கதிர் வீச்சின் அளவே இரவு எவ்வளவு வெப்பநிலை நிலவும் என்பதை தீர்மானிக்கிறது.

இந்தக் குளிர் நிலைமை, முகில்களற்ற வானம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கடற்பகுதிகளில் நிலவும் குளிரான நிலைமை, உயர் அமுக்கம், பலவீனமான காற்று, சாரீரப்பதன் அளவு போன்ற காரணங்களால் தீர்மானிக்கப்படுகின்றது.

ஆகவே அடுத்த சில நாட்களுக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மக்கள் இந்தக் குளிர் நிலைமை தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியம்.

இதேவேளை வடக்கில் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை அவ்வப்போது மிதமான மழை கிடைக்கும் எனவும் 24 மற்றும் 25ஆம் திகதிகளில் சற்று கனமான மழை கிடைக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## திசை காட்டும்...

அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் வலிகாமம் தெற்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராசா பிரகாஸிடம் பிரதேச சபையில் வைத்து பொலிஸாரால் நேற்றுத் திங்கட்கிழமை வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - வலிகாமம் தெற்கு பிரதேச சபையினால், கந்தரோடைப் பகுதியில் விகாரைகள் அமைந்துள்ளதாகக் கூறப்படும் பகுதிகள் "கந்த ரோடை தொல்லியல் ஆய்வு மையம்" என அடையாளப்படுத்தப்பட்டதை அடுத்து, பிரதேச சபையின் அனுமதியின்றி யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில், சுன்னாகம் சந்தைக்கு அருகில் தனியார் காப்புறுதி நிறுவனம் ஒன்றினால் "கந்த ரோடை விகாரை" என நாட்டப்பட்டிருந்த திசை காட்டும் பெயர்ப் பலகை கடந்த 08ஆம் திகதி பிரதேச சபையினரால் அகற்றப்பட்டது.

அதேவேளை குறித்த பகுதியில் காணப்படும் சந்தைக் கட்டடம் ஒல்லாந்தர் காலத்திற்கு உரியதாகும். அதன் சிறப்புக்கள் தொடர்பில் மும்மொழிகளிலும் எழுதிய கல்வெட்டு அப்பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டது.

இந்நிலையிலேயே பொலிஸார் தவிசாளரிடம் வாக்குமூலம் பெற்றுள்ளனர். (ம-7,33)

## யாழில்...

இந்நிலையில் நேற்று அதிகாலை இரத்த வாந்தி எடுத்துள்ளார்.

பின்னர் காலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட [illegible] தில் உயிரிழந்துள்ளார்.

அவர் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

உயிரிழப்புத் தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (ம-7,104)

## 4 பௌத்த பிக்கு...

பௌத்த பிக்குமாரும் பொதுமக்கள் ஐவரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக 2025ஆம் ஆண்டு நவம்பர் 16ஆம் திகதியன்று, முறையான அனுமதியின்றி கடற்கரைப் பாதுகாப்பு வலயத்திற்குள் புத்தர் சிலை நிறுவப்பட்டது.

இந்த நிலையில் கடற்கரைப் பாதுகாப்புத் திணைக்களம் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில், பொலிஸார் சிலையை அகற்ற முயன்றபோது அங்கு பதற்றமான சூழல் உருவானது.

தேரர்களும் பிரதேச மக்களும் இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனையடுத்து, சட்ட விரோதக் கட்டுமானம் மற்றும் அரச அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை போன்ற காரணிகளின் கீழ், அவர்கள் மீது இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, நீதிமன்ற வளாகத்தில் பெருமளவிலான மக்கள் திரண்டிருந்தனர்.

இதனால் ஏற்படக்கூடிய அசம்பாவிதங்களைத் தவிர்க்கும் பொருட்டு, நூற்றுக்கணக்கான பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமைக்கு அமர்த்தப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. (ம-7)

## வைத்...

நிபுணர்கள் உட்பட அனைத்து வைத்தியர்களும் ஒன்றிணைந்து நாடு தழுவிய ரீதியில் தொடர் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

ஏற்கெனவே வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலை கட்டமைப்பினுள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்குத் தீர்வினை வழங்குமாறு வலியுறுத்தி, ஒரு சில நடவடிக்கைகளிலிருந்து வைத்தியர்கள் விலகியிருக்கும் தொழிற்சங்கப் போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர். இந்நிலையில் இதன் இரண்டாம் கட்டமாக எதிர்வரும் 23ஆம் திகதி முதல் அரசாங்கம் உணரும்வகையில் தொழிற்சங்க நடவடிக்கையைத் தீவிரப்படுத்த உள்ளதாக அச்சங்கம் தெரிவித்துள்ளது.

அத்தோடு, அக்கரைப்பற்று வைத்தியசாலையில் நிலவிவரும் நிர்வாகச் சீர்கேடு காரணமாக, வைத்தியர்களும் வைத்திய ஊழியர்களும் பணிபுரிவதற்கு உகந்த பாதுகாப்பான சூழல் இல்லை எனவும், அவ்வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் பிரதேச அரசியல்வாதிகள் மற்றும் குழுக்களுடன் இணைந்து ஊழியர்களுக்கு மிரட்டல் விடுப்பதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது. (ம-7)


### மஹஜன சம்பத
திகதி 2026.01.19 | சீட்டிழுப்பு இலக்கம் 6079
Z 5 9 1 1 8 7

### அத சம்பத
Z 1 1 8 7 | சீட்டிழுப்பு இலக்கம் 0654
National Lotteries Board

### சுப தவசக்
திகதி 2026.01.19 | சீட்டிழுப்பு இலக்கம் 195
இடபம் 13 14 25 | 8681

### தன நிதானய
திகதி - 2026.01.19 | சீட்டிழுப்பு இலக்கம் - 2109
T 31 39 69 82 T

### மெகா பவர்
திகதி 19/01/2026 | சீட்டிழுப்பு இலக்கம் 2427
Q 16 08 25 71 77

### ஜய
திகதி 2026.01.19 | சீட்டிழுப்பு இலக்கம் 0347
G 1 2 6 7

### கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4321 | சீட்டிழுப்பு திகதி 19.01.2026
M 49 50 61 73
M

### HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.01.19 | சீட்டிழுப்பு இலக்கம் 1388
விருச்சிகம் 02 47 50 53 விருச்சிகம்

### உத்தியோகபூர்வ முடிவுகள் — ஷனிதா சம்பத
19.01.2026 | வெற்றி வாரம் 0787
U 4 2 8 3 9 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.33,259,060.40
DLB

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3053 | சீட்டிழுப்பு திகதி 2026.01.19 | தினம் திங்கட்கிழமை
02 46 65 75 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 90,965,064.00
DLB

### சனிதா
திகதி 19.01.2026 | வெற்றி வாரம் 5214
03 04 72 77 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,402,944,40
DLB

### சசிரி
வெற்றி வாரம் 883 | சீட்டிழுப்பு திகதி 19.01.2026 | திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 12 32 33
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
DLB

### ராசி
சீட்டிழுப்பு வாரம் 4765 | சீட்டிழுப்பு திகதி 19.01.2026 | தினம் திங்கட்கிழமை
23 29 36 54 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,623,067.20
DLB

### கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 28 11 18 59 67
2229 | 19.01.2026 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.621,804,665.00
DLB

### அட கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை | வெற்றி வாரம்: 2879 | சீட்டிழுப்பு திகதி: 2026.01.19
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.79,909,536.80
07 34 46 64 N
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 Kg சீனி வாங்கினால் 1 Kg சீனி இலவசம்

SPECIAL OFFER

## தாரணி சூப்பர் மார்க்கெட்டின் 5 வருட பூர்த்தியை முன்னிட்டு மாபெரும் அதிரடிச் சலுகை

## 1 Kg சீனி வாங்கினால் அதே 1 Kg சீனி இலவசம்

சீனி SUGAR + சீனி SUGAR

Rs. 2649.00 Vijitha 10Kg Bag
RS.1119.00 Anchor 400g
RS.799.00 Marvel 16 PCS
RS.1129.00 Anchor Plus 400g
RS.3449.00 Sustagen 400G
RS.299.00 Nice and Clean Baby Wipes 80 PCS
RS.1849.00 Protinex
30% Discount Ladies Hand Bags

## இச் சலுகை 2026.01.21 (புதன்கிழமை) மட்டுமே

RS. 295.00 Leaf Paper Serviettes Buy 1 Get 2 free
Gold Buy 2 Get 1 Free

Tharany SUPERMARKET

மேலும் பல பொருட்கள் விசேட விலைக்கழிவில்..

ஒரு அலகிற்கு மேற்பட்ட கொள்வனவிற்கு ஒன்று மாத்திரமே வழங்கப்படும்.

30% Discount Plastic Items
RS.379.00 Maliban Chocolate Cream 400g

(1958)

இல. 758, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (குட்டாதெருச் சந்திக்கு அருகில்)

077 1997 206


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org